விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 18.04.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 138 | பக்கங்கள் : 16







## விடுதலை புலிகளை மீள உருவாக்க முயற்சி? யாழில் நால்வர், முல்லைத்தீவில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 18

பயங்கரவாத செயல்பாடுகளை ஊக்குவிக்கும் விதமாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்கம் செய்ய முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவை சேர்ந்த ஐந்து பேர் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் பிரிவில் இருவரும், கோப்பாய், பலாலி பொலிஸ் பிரிவுகளில் தலா ஒருவரும் என நான்கு பேர் நேற்று அதிகாலை பயங்கரவாத விசாரணை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பை சேர்ந்த ஒருவரும் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டார். இவர், அண்மையில் இந்தியாவில் ஆயுதங்களுடன் பிடிபட்டவர்களு

15

## பொலிஸார் 78 குண்டுகள் முழங்க விவேக்கின் உடல் தீயுடன் சங்கமம்!





சென்னை, ஏப். 18

சின்னக் கலைவாணர் என்று அழைக்கப்படும் நடிகர் விவேக்கின் உடல் நேற்று தீயுடன் சங்கமமானது. அவருக்கு 78 குண்டுகளை முழங்க

15

# ஞானசார தேரர் மீது குற்ற சட்டம் பாயும்!

### ஆறு அமைச்சர்களின் குழு பரிந்துரை பொதுபல சேனா மீது தடையில்லை



கொழும்பு, ஏப்ரல் 18

**பொதுபல சேனாவின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக குற்றவியில் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க 6 அமைச்சர்கள் கொண்ட குழு பரிந்துரை செய்துள்ளது.**

15

## யாழ்ப்பாணத்தில் 10 பேர் உட்பட: வடக்கில் நேற்று 14 பேர் கொரோனாவுக்கு இலக்கு!

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ்ப்பாணத்தில் 10 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 14 பேருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக யாழ். போதனா வைத்திய சாலையின் ஆய்வுகூட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் ஆய்வு

15

## இலங்கைக்குள் வேறு நாட்டின் மாநிலத்தை நிறுவ விடமாட்டோம்

### ஓமல் பே சோபித தேரர்

கொழும்பு, ஏப். 18

இலங்கைக்குள் வேறொரு நாட்டின் மாநிலத்தை நிறுவுவதற்கான நடவடிக்கையை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம் என்று ஜாதிக ஹெல உறுமயவின் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கையை சீனவின் காலனியாக மாற்ற அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளை முறியடிக்க

15

## கொரோனாவால் நேற்றும் யாழில் ஒருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 18

கொரோனா தொற்று காரணமாக யாழ்ப்பாணத்தில் நேற்றும் ஒருவர் உயிரிழந்தார் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த மானிப்பாய், செல்லமுத்து வீதியைச் சேர்ந்த 65 வயது பெண்யே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

15

## பொலிஸாருக்கு தொற்று யாழில் 3ஆக அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றுக்கு இலக்கான பொலிஸாரின் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் தனிமைப்படுத்தலில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

முன்னதாக, நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்

15

## கொழும்பு துறைமுக நகரில் இலங்கை சட்டமே செல்லுபடி!

### 7 சந்தேக கேள்விக்கு தேசிய ஊடக மையம் பதில்!

கொழும்பு, ஏப். 18

கொழும்பு துறைமுக நகரம் முழுமையாக சீனாவின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட தனிப் பிராந்தியமாக மாறும் என்ற குற்றச்சாட்டுக்கள் தவறானவை - ஆதரமற்றவை என்று தேசிய மேம்பாட்டுக்கான ஊடக மையம் தெரிவித்துள்ளது.

15

## கொழும்பு துறைமுக நகர சட்டம்; எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்பு!

கொழும்பு, ஏப். 18

கொழும்பு துறைமுக நகரத்தை நிர்வகிப்பதற்கான ஆணைக்குழு சட்டமூலம் வெளிநாடுகளில் கறுப்புப் பணத்தை சேமிக்காத இலங்கையர்களுக்கு சம வாய்ப்பை மறுக்கின்றது என்று எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு

15




06 இளவரசர் பிலிப் வாங்கிய முதல் கார் கொழும்பில்!



07 இஸ்லாமிய தீவிர வாத அமைப்பு களின் அனைத்துச் சொத்தும் பறிமுதல்



08 நடிகர் விவேக் ஜனங்களின் கலைஞனான கதை!



12 கூட்டமைப்பை பாதுகாப்பதற்கு சுமந்திரனை வெளியேற்றுங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு துறைமுக...

அத்துடன், இலங்கையின் சட்டங்களுக்கு உட்பட்டே அது இயங்கும். அங்கு இலங்கை பணம் உட்பட அங்கீகரிக்கப்பட்ட நாணயங்களை பரிவர்த்தனை செய்ய முடியும் என்றும் அந் மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நிலவும் சந்தேகங்களை கேள்வி - பதிலாக தயாரித்து தேசிய மேம்பாட்டுக்கான ஊடக மையம் வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:

கேள்வி: துறைமுக நகர ஆணைக்குழு ஏன் நிறுவப்படுகிறது?

பதில்: ஒரு புதிய ஆணைக்குழு முதலீட்டாளர்களின் வசதிக்காக இங்கு செயற்படும். துறைமுக நகரத்திற்குள் நுழையும் வெளிநாட்டினருக்கான விசாக்கள், வங்கி உரிமங்கள் மற்றும் பிற சேவைகள் சம்பந்தப்பட்ட இலங்கை அரசு நிறுவனங்களால் இலங்கை சட்டத்தின்படி வழங்கப்படும்.

கேள்வி: துறைமுக நகரை கட்டுப்படுத்துவது யார்?

பதில்: துறைமுக நகர ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்படுவதால் துறைமுக நகரம் இலங்கையால் நிர்வகிக்கப்படுகிறது. அந்த உறுப்பினர்களை எந்த நேரத்திலும் அகற்றும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. உறுப்பினர்கள் குற்றம் செய்தால் அவர்களை எந்த நேரத்திலும் இலங்கை நீதிமன்றங்களுக்கு முன் நிறுத்த முடியும்.

கேள்வி: சீனர்கள் மட்டுமே இங்கு முதலிட முடியுமா?

பதில்: எந்த நாட்டினரும் துறைமுக நகரில் முதலீடு செய்யலாம். இலங்கை தொழிலதிபர் ஒருவர் ஏற்கனவே இங்கு முதலீடு செய்ய முன்வந்துள்ளார். முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்காக இங்கு வரிச் சலுகைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கேள்வி: இலங்கை ரூபாவில் பரிவர்த்தனை செய்யலாமா?

துறைமுக நகரில் இலங்கை ரூபா மற்றும் பிற ஏற்றுக்கொள்ளப்பட்ட நாணயங்களில் பரிவர்த்தனை செய்யலாம்.

கேள்வி: துறைமுக நகரத்திற்குள் இலங்கையர்கள் பணியாற்ற முடியுமா?

பதில்: எந்த இலங்கையரும் துறைமுக நகரத்துக்குள் பணியாற்றலாம். அவர்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் சம்பளம் வழங்கப்படும். அவர்களின் சம்பளம் உள்ளூர் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்படலாம். அதற்கு வரி விலக்கு அளிக்கப்படும்.

கேள்வி: துறைமுக நகர பொலிஸார் யார்?

பதில்: இலங்கை பொலிஸார் துறைமுக நகரத்திற்குள் செயற்படுவார்கள். இங்கு இடம்பெறும் பிரச்சிகைகள் குறித்த எந்தவொரு வழக்குகளும் இலங்கை நீதிமன்றங்களில் விசாரிக்கப்படும்.

கேள்வி: துறைமுக நகருக்குள் நுழைய இலங்கையருக்கு விசா தேவையா?

பதில்: துறைமுக நகருக்குள் நுழைய விசா தேவையில்லை. வேலை, ஓய்வு, கொள்வனவு, பொழுதுபோக்கு உள்ளிட்ட காரணங்களுக்காக யார் வேண்டுமானாலும் துறைமுக நகருக்குள் செல்லலாம். (ஐ)

## இலங்கைக்குள்...

அனைத்து பிரிவுகளும் ஒன்றிணைய வேண்டும் என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

இலங்கையின் ஒரு பகுதியைக் கைப்பற்ற போரை நடத்திய பிரிவினைவாதிகளிடமிருந்து நாட்டை விடுவிப்பதற்காக நாடு 30 ஆண்டுகாலம் யுத்தம் செய்ய வேண்டியிருந்தது. நாட்டின் ஒரு பகுதியை கைப்பற்ற இப்போது ஒரு ஆயுதப் போராட்டமின்றி வேறு வழிகளில் செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டார்.

இந்த வரைவு நிறைவேற்றப்பட்டால், 1,115 ஏக்கர் நிலத்தின் கட்டுப்பாட்டை சீனாவிடம் இலங்கை இழக்கும் என்று குறிப்பிட்டார். துறைமுக நகர சட்ட வரைவின் விளைவுகள் குறித்து பொது மக்களின் பிரதிநிதிகள் அறிந்திருக்கிறார்களா?, நாட்டின் ஒரு பகுதியை சீனாவுக்கு ஒப்படைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக இருக்க தயாராக இருக்கிறார்களா என்றும் கேள்வி எழுப்பினார்.

ஒரு குறுகிய காலத்திற்கு மட்டுமே நாட்டை நிர்வகிக்க ஜனாதிபதியும் அரசாங்கமும் நியமிக்கப்பட்டுள்ளனர். இலங்கையின் சில பகுதிகளை வெளிநாட்டு சக்திகளிடம் ஒப்படைக்க அவர்களுக்கு உரிமை இல்லை என்றும் ஓமல்பே சோபித தேரர் வலியுறுத்தினார்.

இலங்கையின் எந்தப் பகுதியையும் நிர்வகிக்க வேறு நாடுகளுக்கு அதிகாரங்களை வழங்குவதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் நாங்கள் கடுமையாக எதிர்ப்போம்- என்றார். (ஐ)

## வடக்கில் நேற்று...

கூடத்தில் நேற்று 404 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன் அடிப்படையில், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நால்வருக்கும், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கும், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், உடுவில் மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளில் தலா ஒருவருக்கும், யாழ். போதனா வைத்தியசாலையில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேபோன்று, கிளிநொச்சி தேசிய தொற்றுநோய் வைத்தியசாலை, முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் தலா இருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். (ஐ-03)

## கொரோனாவால்...

குறித்த பெண் நாள்பட்ட சிறுநீரக செயலிழப்பு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கானார் என்று கூறப்படுகின்றது.

இவரின் சடலம் கொரோனா பாதுகாப்பு நடைமுறைகளின் கீழ் தகனம் செய்யப்படவுள்ளது. (ஐ)

## விடுதலை புலிகளை...

டன் தொலைபேசி மூலம் உரையாடினார் என்றும், யாழ்ப்பாணத்தில் கைதானவர்களுடனும் தொடர்பைப் பேணினார் எனவும் கூறப்பட்டது.

இவ்வாறு கைதானவர் 45 வயதான முன்னாள் போராளி என்பதுடன் குடும்பஸ்தர் என்றும் தெரிய வருகின்றது.

இவர்கள் ஐவரும் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என்றும் அறியமுடிகின்றது. (ஐ - எ - 3)

## பொலிஸாருக்கு...

தில் இரு பொலிஸார் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொழும்பு...

தொடர்பாக அரசாங்கம் சட்ட மூலம் ஒன்றை முன்வைத்துள்ளது. இந்த சட்டத்தின் மூலம் துறைமுக நகர ஆணைக்குழுவுக்கு அளவுக்கு அதிகமான அதிகாரத்தை வழங்கியுள்ளது எனவும் அந்தக் கட்சி சாடியுள்ளது.

மேலும், துறைமுக நகர ஆணைக்குழுவுக்கு வெளிநாட்டவர்கள் நியமிக்கப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன. இதனால், மக்களின் தலைவிதி வெளிநாட்டவர்களால் தீர்மானிக்கப்படும் நிலை உருவாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் சட்ட செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி திசத் விஜயகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை நன்மை அடையக்கூடிய திட்டமாக துறைமுக நகரம் கருதப்பட்டாலும், இந்தச் சட்டமூலம் நாட்டுக்கு தீங்கு விளைவிக்கும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி உயர்நீதிமன்றத்தில் இரண்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நல்லாட்சியில் கோட்டாவை கைதுசெய்ய முயன்றபோது

## பாதுகாத்தவர் விஜயதாஸ



கொழும்பு,ஏப்.18

நல்லாட்சி அரசாங்கத்தில் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்வதற்கு முயற்சிகள் இடம்பெற்றபோது, அது சட்டத்துக்கு முரணான செயல்பாடு என தெரிவித்து அவரை சிறைவாசத்திலிருந்து பாதுகாத்தவர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ ஆவார்.

அவ்வாறான நபருக்கு அச்சுறுத்தல் விடப்படுவது பொறுத்தமற்றது. இவ்வாறான பொறுத்தமற்ற நடவடிக்கைகளை ஜனாதிபதி மாற்றிக்கொள்ள வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா அறிவுரை கூறியுள்ளார்.

செய்யும் தொழில் பற்றி அறியாவிட்டால் மறைந்த ராஜபக்ஷக்களின் கௌரவத்துக்கு இழுக்கை ஏற்படுத்தாமல், தயவு செய்து பதவியை ஒப்படைத்து விட்டுச் செல்லுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வலியுறுத்துவதாகவும் மேர்வின் சில்வா குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# 617 பேர் தொற்றால் மரணம்!

கொழும்பு, ஏப்.18

நாட்டில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றால் 617 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், இறுதியாக 2 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை 96 ஆயிரத்து 100 ஐ கடந்தது.

நேற்றுச் சனிக்கிழமை இரவு 9 மணி வரை 204 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். இதற்கமைய மொத்த தொற்றாளர் எண்ணிக்கை 96 ஆயிரத்து 390 ஆக உயர்வடைந்தது.

இனங்காணப்பட்ட மொத்த தொற்றாளர்களில் 92 ஆயிரத்து 832 பேர் குணமடைந்துள்ளதோடு, 2907 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ)

# திருமணமான பெண்களில் 22வீதத்தினர் மந்த போசணைக்கு உள்ளாகியுள்ளனர்!

மட்டக்களப்பு, ஏப். 18

இலங்கையில் திருமணமான பெண்களில் 22 வீத மானவர்கள் மந்த போசனைக்கு உள்ளாகியுள்ளனர் என்று கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி இ.சிறிபிரதீப் தெரிவித்தார்.

'வாழ்க்கைக்கான தோட்டம்' என்னும் தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக மட்டக்களப்பில் நடைபெற்ற முருங்கை மரக்கன்றுகளை வழங்கும் நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

900 நோய்களை குணப்படுத்தும் மகத்துவ சக்தி முருங்கை இலையில் காணப்படுகின்றது. இதனாலேயே முருங்கை மரக்கன்றுகள் வழங்கப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

முருங்கை மரங்களை நடும் தேசிய வேலைத் திட் டம் நேற்று நாடளாவிய ரீதியில் இடம்பெற்றது. (ஐ)

## ஞானசார தேரர் மீது...

அவர், 2013இல் மகரகம அளுத்கம பிரதேசங்களில் ஆற்றிய உரைகள் இனவாதம் மற்றும் வன்முறைகளுக்கு வித்திட்டன என்று ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பித்தது. இந்த பேச்சுக்கள் குறித்து ஆராயும் பொறுப்பு சட்ட மா அதிபரிடம் தற்போது உள்ளது.

எனினும், பொதுபல சேனா அமைப்புக்கு தடை விதிக்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் ஆணைக்குழுவின் பரிந்துரையை அமைச்சர்கள் குழு நிராகரித்துள்ளது.

இது தொடர்பில் ஞானசார தேரர் தமக்கு எதுவும் தெரியாது என்றும், இது தொடர்பில் தனக்கு எந்த அறிவிப்பு கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு கடந்த 5ஆம் திகதி தமது பரிந்துரை அறிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் வழங்கியது.

இந்த ஆணைக்குழுவின் அறிக்கையை ஆய்வு செய்து பரிந்துரைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் அமைச்சர்கள் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பிரசன்ன ரணதுங்க, ரோஹித அபேகுணவர்த்தன மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் உதய கம்மன்பில, ரமேஷ் பத்திரண ஆகியோர் கொண்ட ஆறு பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கோயில் மணி விழுந்து முதியவர் படுகாயம்!

தென்மராட்சி, ஏப். 18

கோயில் மணி தலையில் விழுந்ததால் படுகாயமடைந்த முதியவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை மட்டுவில் பகுதியில் உள்ள வைரவர் கோயில் ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

காலைப் பூசைக்காக கோயிலுக்கு சென்ற முதியவர் மணியை அடித்த போது அது அறுந்து அவரின் தலையில் விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பொலிஸார்...

செய்து இறுதி மரியாதை அளிக்கப்பட்டது.நகைச்சுவை நடிகர் - சமூக சிந்தனையாளர் - சமூக சேவையாளர் - பேச்சாளர் என்று பன்முக ஆளுமை கொண்ட நடிகர் விவேக் மாரடைப்பு காரணமாக நேற்று அதிகாலை காலமானார்.

அவருக்கு, இந்தியப் பிரதமர் உட்பட அரசியல் பிரமுகர்கள், திரையுலகப் பிரபலங்கள் எனப் பலரும் இரங்கல்களை தெரிவித்தனர்.

இந்நிலையில், அவரின் இறுதி ஊர்வலம் நேற்று மாலை 5 மணிக்கு ஆரம்பமானது. பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்புடன், சென்னை - மேட்டுக்குப்பம் மயானத்தில் அவரின் உடல் நேற்று தகனம் செய்யப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்குமிடையே அந்தக் காலத்தில் சிறிய சிறிய படகுகள்தான் பயணிகளை ஏற்றிச் செல்லும். இப்போது இருப்பது போன்ற பாரிய படகுச் சேவை அப்போது இருக்கவில்லை.

ஒருநாள் ஒரு படகில் போய்க்கொண்டிருந்தபோது, அந்தப் படகை ஒரு சிறுவன் ஓட்டிக் கொண்டிருந்தான். பாடசாலைக் கல்வியை இடையில் நிறுத்திவிட்டு குடும்ப நிலைமை காரணமாக படகு ஓட்டும் தொழிலுக்கு வந்திருப்பான் என்று நினைக்கிறேன்.

படகில் ஒரு ‘நஷனல்’போட்ட ஒருவரும் பயணம் செய்து கொண்டிருந்தார். பண்டிதராக இருக்கவேண்டும். பண்டிதர் என்றால் அது ஒரு பட்டப்படிப்பு. தமிழில் அவர் பாண்டித்தியம் பெற்றிருப்பார்.

அவர் அந்த படகோட்டி பையனிடம் கேட்டார், ‘தம்பி உனக்கு இராமாயணம் என்றால் என்ன என்று தெரியுமா?

பையன் சொன்னான் ‘இல்லை ஐயா”

பண்டிதர் சொன்னார், ‘அட வாழ்க்கையில கால்வாசியைத் தொலைத்து விட்டாயே’ என்று.

‘இந்த கோவலன் - கண்ணகி கதையாவது தெரியுமா? என்றார் பண்டிதர். அதற்கும் பையன் இல்லை என்றபோது, பண்டிதர் சொன்னார், “அட வாழ்க்கையில அரைவாசியைத் தொலைத்துவிட்டாயே’ என்று.

இவர்கள் இப்படி கதைத்துக் கொண்டிருக்கும்போது படகில் இருந்த சிறிய ஓட்டை ஊடாக தண்ணீர் உள்ளே வந்துகொண்டிருந்தது.

இப்போது அந்தப் பையன் கேட்டான், ‘ஐயா உங்களுக்கு நீந்தத் தெரியுமா?’ என்று.

அதற்கு பண்டிதர் சொன்னார், ‘இல்லையடா தம்பி’ என்று.

அப்போது பையன் சொன்னான், ‘ஐயா நீங்கள் உங்கட வாழ்க்கையையே தொலைக்கப் போறீங்கள்... படகு மூழ்கப்போகிறது’ என்று....!

நேற்றைய தினம் இந்தப் பத்தியில் மாகாண சபை தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளர் குறித்த எழுதியிருந்தேன்.

விக்னேஸ்வரன் ஐயா, தனது விருப்பத்தை பற்றி குறிப்பிட்டிருந்தது அவரது தனிப்பட்ட விருப்பமே தவிர, அது அவர் தலைமைதாங்கும் கூட்டணியின் முடிவு அல்ல என்று அவரது பங்காளிக் கட்சி ஒன்றின் தலைவர் என். சிறிகாந்தா அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

நேற்றைய பத்தியைப் படித்த ஒரு நண்பர் லண்டனிலிருந்து தொடர்பு கொண்டார். அவர் இந்த மாகாண சபைகள் உருவாகுவதற்கு இந்தியாவோடு இணைந்து பணியாற்றிய கட்சி ஒன்றைச் சேர்ந்தவர். பதின்மூன்றாவது திருத்தத்தை பலப்படுத்தி நமது அரசியல் நகர்வை கொண்டு செல்லவேண்டும் என்று திடமாக நம்புபவர் அவர்.

‘விக்னேஸ்வரன் ஐயா, மாகாண சபை முதல்வர் பதவிக்கு மாவை தகுதியானவர் இல்லை என்றும் தெரிவித்திருக்கிறாரே நீங்கள் கவனிக்கவில்லையா?’ என்று கேட்டார் அந்த நண்பர்.

‘மாகாண முதலமைச்சர் பதவிக்கு மாவை தகுதியானவர் இல்லை என்று அவர் கூறியிருப்பதும் அவரது தனிப்பட்ட கருத்துத்தான் ஆனாலும், பிள்ளையான் கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்து செய்த வேலைகளில் நூறில் ஒன்றைக் கூட செய்யாதவர் அவர். அவர் எப்படி மாவையை விமர்சிப்பது’ என்று அந்த லண்டன் நண்பர் கொதித்துப் போனார்.

வடக்கு மாகாண சபைக்கு முதன்முதலில் தேர்தல் அறிவிக்கப்பட்டதும், முதலமைச்சர் வேட்பாளராக மாவையை களமிறக்கவேண்டும் என்பதே கூட்டமைப்பின் பெரும்பான்மையானவர்களின் விருப்பமாக இருந்தது. இன்று விக்னேஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்கூட மாவையை வேட்பாளராக்க வேண்டும் என்றே கடைசிவரை அடம்பிடித்தார். மாவையும் அந்த விடயத்தில் விடாப்பிடியாக நின்றிருந்தால், இன்று விக்னேஸ்வரன் அரசியலில் இருந்திருக்கவே மாட்டார்.

இதுகுறித்து ஒரு தடவை, மாவையிடமே இந்த ஊர்க்குருவி கேட்டபோது அவர் சொன்ன பதில் சற்று வித்தியாசமானது.

விக்னேஸ்வரன் அப்போது மட்டக்களப்பில் நீதிவானாக பணியாற்றிக் கொண்டிருந்தபோது, மாவை மட்டக்களப்பில் வைத்து கைது செய்யப்பட்டு, நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தாராம். அப்போது அவருக்கு பிணை வழங்கக்கூடாது என்று பொலிஸார் வற்புறுத்தியபோதிலும் நீதிவான் அவரை பிணையில் விடுவித்தார். அத்துடன், தனது தமிழ்த் தேசிய உணர்வையும் வெளிப்படுத்தியது எனக்கு ஞாபகம் வந்தது. அவரது அந்த உணர்வுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதற்காகவே நான் அப்போது அவரை ஏற்றுக்கொள்ள விரும்பினேன் - என்றார் மாவை.

ஆக, மாவையின் தமிழ்த் தேசியத்தின் மீதான பிடிப்பே விக்கியை வேட்பாளராக்கியிருக்கிறது.

அந்தப் படகோட்டிச் சிறுவன்போல மாவைக்கும் சில விடயங்கள் தெரியும் என்பதை உணரவேண்டியவர்கள் உணர்ந்தால் சரி!

**- ஊர்க்குருவி.**

# சாவடியில் படையினரை மோதித்தள்ளி விபத்துக்குள்ளானது கடத்தல் வாகனம்!

## ஓமந்தையில் நேற்று சம்பவம்



வவுனியா, ஏப். 18

வவுனியாவில் சட்டவிரோத மரங்களை கடத்திச் சென்ற வாகனம் மோதித் தள்ளியதில் இரு இராணுவத்தினர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு:

ஏ -9 வீதி வழியே வவுனியா நோக்கி மரங்களை ஏற்றிச் சென்ற வாகனத்தை ஓமந்தை சோதனை சாவடியில் கடமையில் இருந்த இராணுவத்தினர் வழி மறித்தனர்.

ஆனால், அவர்கள் வாகனத்தை நிறுத்தாமல் வழி மறித்த இராணுவத்தினரை மோதித் தள்ளி விட்டு வேகமாகச் சென்றனர். இதன்போது வாகனத்தில் சிக்குண்டு சிப்பாய் ஒருவர் நீண்ட தூரத்துக்கு இழுபட்டு சென்று தூக்கி எறியப்பட்டதில் படுகாயங்களுக்கு இலக்கானார்.

காயமடைந்த இரு சிப்பாய்களும் உடனடியாக சக இராணுவத்தினரால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இதேசமயம் அதிவேகமாக சென்ற அந்த மரக்கடத்தல் வாகனம் விபத்துக்குள்ளானது. எனினும் அதன் சாரதி தப்பிச் சென்றுள்ளார்.

அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# ‘துணிச்சல் பெண்மணி’ விருது வென்ற சட்டத்தரணி ரனித்தாவுக்கு வரவேற்பு!

மன்னார், ஏப். 18

2021ஆம் ஆண்டுக்கான துணிச்சலான பெண்மணி என்ற சர்வதேச விருதிப் பெற்ற மன்னார் மாவட்டத்தை சேர்ந்த சட்டத்தரணி திருமதி ரனித்தா ஞானராஜாவை வரவேற்றுக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை மாலை 3 மணியளவில் மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து இந்தக் கௌரவிப்பு நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.

திருமதி ரனித்தா ஞானராஜா மன்னார் பஜார் பகுதியில் இருந்து மாலை அணிவித்து, இசை வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக அழைத்து நகர மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து நகர மண்டபத்தில் நிகழ்வுகள் இடம் பெற்றது. பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இமானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை கலந்து கொண்டதோடு, சர்வமத தலைவர்கள், வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ். வினோ நோகராதலிங்கம்,சாள்ஸ் நிர்மலநாதன்,



உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் திணைக்கள அதிகாரிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் பெண்கள் அமைப்பு என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, 2021 ஆம் ஆண்டுக்கான துணிச்சலான பெண்மணி என்ற சர்வதேச விருதைப் பெற்ற சட்டத்தரணி திருமதி ரனித்தா ஞானராஜா அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி ஞாபக சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சவூதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்கள் பிரச்னைக்கு விரைவில் தீர்வு!

## அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உறுதி



கொழும்பு, ஏப். 18

சவூதி அரேபியாவில் தன்னிச்சையாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைப் பெண்கள் 41 பேர் குறித்த சிக்கல்களுக்கு விரைவில் தீர்வு எட்டப்படும் என்று விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

பத்திரிகையாளர் ஒருவர் இது குறித்து ருவிட்டர் சமூக வலைத்தளத்தில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் நாமல், இந்த விடயத்தை வெளிவிவகார அமைச்சுக்கு அறிவிப்பேன் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசுவுள்ளார் எனவும் கூறினார்.

மேலும், அவர்கள் ஊடாக இந்த விடயத்துக்கு விரைவாகத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை பெண்கள் குறைந்தது 41 பேர் சவூதி அரேபியாவில் கைது செய்யப்பட்டு 8 - 18 மாதங்கள் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன், குறைந்தது 3 பெண்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மேலும், இந்தப் பெண்களில் ஒருவருக்கு அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்படுகின்றது என்று சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

மேலும், அந்தப் பெண்கள் வழக்கறிஞரை அணுகவோ, தூதரக உதவி பெறவோ அனுமதிக்கப்படவில்லை என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
18.04.2021 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி, சித்திரை 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# பௌத்த அமைப்புக்கள் தடை செய்யப்படுமா?

ஈஸ்டர் தாக்குதலை தொடர்ந்து முதன்முதலாக இஸ்லாமிய அமைப்புக்கள் தொடர்பில் அரசாங்கத்தின் பார்வை திரும்பியது. அதுவரையில் புலி ஆதரவு தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் தொடர்பில் மட்டுமே அரசாங்கம் கவனம் செலுத்தியிருந்தது. ஆனால், ஈஸ்டர் தாக்குதல், முதன்முதலாக இஸ்லாமிய அமைப்புக்களை கண்காணிப்பிற்குள் வைத்திருக்கவேண்டுமென்னும் நிலைமையை தோற்றுவித்திருந்தது. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து, ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் அடுத்த கட்ட விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் அழுத்தங்கள் அரசாங்கத்திற்கு நெருக்கடியாக மாறியது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே, 11 இஸ்லாமிய அமைப்புக்கள்மீது அரசாங்கம் தடையை விதித்திருக்கின்றது. குறித்த அமைப்புக்களின் சொத்துக்களை முடக்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. இதே வேளை, முன்னைய ரணில் அரசாங்கம் தடைப் பட்டியலிலிருந்து நீக்கிய புலம்பெயர் அமைப்புக்கள் சிலவற்றின்மீது, மீளவும் அரசாங்கம் தடைகளை விதித்திருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் அரசாங்கம் தென்னிலங்கையை தளமாகக்கொண்டிருக்கும் சில பௌத்த அமைப்புக்கள்மீதும் தடைகளை விதிக்க முயற்சிப்பதாக சில தேரர்கள் பேசத் தொடங்கியிருக்கின்றனர். ராஜபக்ஷக்களை மீளவும் ஆட்சிப் பீடமேற்றுவதில் முக்கிய பங்கு வகித்த தேரர்களான முருத்தெட்டுவேவ ஆனந்த தேரர், அஸ்கிரிய அனுநாயக்க தம்மானந்த தேரர், ரத்ன தேரர் மற்றும் 'சிங்கள ராவய' அமைப்பின் தலைவர், 'இராவண பலய' அமைப்பின் தலைவர் ஆகியோரை உள்ளடக்கிய தேரர்கள் குழுவொன்றே, இவ்வாறான கருத்தை தற்போது பொதுவெளியில் முன்வைக்க ஆரம்பித்திருக்கின்றன. தம்மை எவராலும் மௌனமாக்கிவிட முடியாதென்று கூறியிருக்கும் அவர்கள், நாட்டுக்கு எதிரான சட்டங்களை இயற்ற முற்பட்டால், தேரர்கள் அமைதியாக இருக்க மாட்டார்கள் என்றும் எச்சரித்திருக்கின்றனர். குறித்த தேரர்கள் அனைவரும் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவருவதில் முன்னின்று உழைத்தவர்களாவர். இவ்வாறானவர்களே, தற்போது அரசாங்கத்திற்கு எதிர்நிலையில் கருத்துக்களைக்கூற முற்படுகின்றனர். இதனை ஜனாதிபதி எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றார்?

தேரர்கள் கூறுவதுபோன்று, பௌத்த அமைப்புக்கள்மீது இந்த அரசாங்கம் தடைகளை விதிக்குமா? அடிப்படைவாதம் தொடர்பில் அமைப்புக்களை தடைசெய்வதாயின் இராவண பலய, சிங்கள ராவய, பொதுபல சேனாபோன்ற அமைப்புக்கள்மீது தடைகளை விதிக்க வேண்டிவரும். ஆனால், அது அரசாங்கத்தினால் முடியுமா? அத்துடன் அண்மைக்காலமாக 'இந்துத்வா' கருத்தியலை முன்வைத்து வடக்கு - கிழக்கில் இயங்கிவரும் அமைப்புக்களையும் தடைசெய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

தேரர்கள் கூறுவதுபோன்று, பௌத்த அமைப்புக்கள்மீது தடை விதிக்கப்படுமாக இருந்தால், அது இலங்கையின் அரசியல் வரலாற்றிலேயே ஒரு முன்னுதாரனமான வரலாற்று நிகழ்வாக மாறும். ஆனால், அது இலகுவான விடயமல்ல. தன்னை சிங்கள - பௌத்த தலைவராக முன்னிறுத்தியிருக்கும் ஜனாதிபதியினால் அதனை செய்யமுடியுமா? அவர் அதற்கு துணிவாரா? மேலே குறிப்பிடப்பட்ட தேரர்கள் குழு, சிங்கள தேசியவாத கருத்தியலை தாங்கிப் பிடிக்கும் பௌத்த மதத் தளமாகத் தன்னை முன்னிறுத்திவருகின்றது. இதே வேளை, அரசாங்கத்தின் மீதான விமர்சனங்களை தொடர்சியாக மக்கள் மயப்படுத்தி வருகின்றது. அரசியல் ரீதியில் நோக்கினாலும், அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இவர்கள் சிக்கலானவர்களே!

# வடக்கு - கிழக்கிலும் காவிதரித்த அரசியலுக்கு முஸ்தீபு?

- அலசுவது **இராஜதந்திரி** -

இதுவரைகாலமும் இல்லாதவாறு, ஆன்மீகத்துறையில் நாட்டமுள்ள யாழ்ப்பாணத்தின் வேலன் சுவாமிகளை அரசியலில் களமிறக்க வடக்கே சிலர் முயன்று வருவதாக அறியமுடிகின்றது. இவ்வாறு முயற்சிப்பவர்களில் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரனும் அடங்குகின்றார்.

இருந்தபோதிலும், வேலன் சுவாமி அரசியலுக்கு வருமெண்ணம் தமக்கு இல்லையென்று கூறியுள்ளார். வடக்கைப் பொறுத்தவரை எப்போதுமே ஆன்மீகதுறையில் இருப்போர் அரசியலிலிருந்து ஒதுங்கி, மனிதாபிமான பிரச்னைகளுக்கே குரல்கொடுத்து வருவபவர்களாக இருந்து வந்துள்ளனர்.

**பேராயர் இராயப்பு ஜோசப்**

இதற்கு நல்ல உதாரணமாக அண்மையில் காலமான மன்னார் கத்தோலிக்க பேராயர் அதி வண. இராயப்பு யோசப் விளங்கியிருந்தார். அரசியல்வாதிகளைவிட, வடக்கு - கிழக்கின் யுத்தத்தினால் ஏற்பட்ட பாரிய மனித அவலங்களை பேராயர் யோசப் துணிச்சலோடு, ஒளிவு மறைவின்றி சுட்டிக் காட்டியிருந்தார். எந்தவொரு கட்சி சாராதவராகவும், மற்றும் எந்தவொரு தரப்பினருக்கு 'வக்காலத்து' வாங்காதவராகவும் தமது கருத்துக்களை அவர் துணிச்சலோடு வெளியிட்டு வந்தார். ஓர் ஆன்மீக முக்கியஸ்தராக மக்களது துன்ப துயரங்களை குறிப்பாக, கொடூர யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை பிரதிபலிப்பவராக பேராயர் இராயப்பு யோசப் விளங்கியிருந்தார்.

தென்னிலங்கையில் பௌத்தமத தீவிரவாதப்போக்கு வலுவடைந்திருந்த வேளையில், அதற்கு பதிலடிகொடுக்கும் விதத்திலேயே இராயப்பு யோசப் அடிகளாரின் பங்களிப்பு விளங்கியிருந்தது.

வடக்கு-கிழக்கை பொறுத்தவரை எண்பதுகளின் ஆரம்பத்தில் வணக்கத்துக்குரிய கத்தோலிக்க குருமார்களான வண, பிதாக்கள் சின்னராசா, சிங்கராசா ஆகியோர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு, தீவிரவாத நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வளங்கினார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் விசாரிக்கப்பட்டிருந்தனர். இதுதவிர வடக்கில் எந்தவொரு சமய நிறுவனமோ அல்லது மதபெரியார்களோ ஒருபோதும் அரசியலில் குதித்திருக்கவில்லை.

**பொத்துவிலிலிருந்து பொலிகண்டிவரை**

இந்நிலையில், ஒருமாதத்திற்கு முன்னர் பொத்துவிலிருந்து பொலிகண்டிவரை என்ற மாபெரும் பாதயாத்திரையை நடத்திய மக்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவரான வேலன் சுவாமியை அரசியலில் இறக், அவரை அடுத்த வடமாகாண முதலமைச்சராக போட்டியிடவைக்கும் யோசனைகள் தற்போது முன்வைக்கப்பட்டு வருகின்றன.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை பௌத்த குருமார்களின் ஆதிக்கம் அரசியலில் வலுவடைந்திருக்க காணப்படுகின்றது. தென்னிலங்கை அரசியலில் அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகளின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஒரு சக்தியாகவும் பௌத்த குருமார்கள் விளங்கி வருகின்றனர். இப்பௌத்த குருமார்களில் சிலர் ஆட்சியாளர்களையே மிரட்டும் வகையில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இவர்களில் பொதுபலசேனா என்ற அமைப்பின் தலைவரான கலபொட அத்தே ஞானசாரதேரர் முன்னணியில் இருக்கின்றார்.

இதுதவிர, தென்னிலங்கையில் இடம் பெறும் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் என்பவற்றில்கூட பௌத்த குருமார்களே முன்னிலைப்படுத்தப்படுகின்றனர்.

**பௌத்த போதனை**

அமைதி, சாந்தம், சகிப்புத்தன்மைபோன்ற புத்த பகவானின் உயரிய போதனைகளை புறந்தள்ளி, தமது கைவரிசையை காட்டிவருபவர்களாக தென்னிலங்கையிலுள்ள பௌத்த குருமார்கள் விளங்குகின்றனர். வேலன் சுவாமி என்ற காவி உடை தரித்த துறவி, நல்லூர் திருவிழாக்காலங்களில் சிறுவர்களை ஒன்று திரட்டி, தாமே முன்னின்று சுவாமி ஊர்வலங்களில் அவர்களை பஜனைப் பாடல்களை பாடவைப்பதை காணமுடியும்.


**நல்லை ஆதீனம்**

வேலன் சுவாமியைவிட, யாழ்ப்பாணத்தில் உள்ள நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தென்னிலங்கை அரசியல்வாதிகள் மத்தியிலும் மற்றும் யாழ்ப்பாணத்தில் உயர் அரச பதவிகளை பொறுப்பெற்க வரும் அதிகாரிகள் மத்தியிலும் பிரபலமானவராக இருக்கின்றார். 2015ஆம் ஆண்டு இலங்கைக்கு பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸ் விஜயம் செய்தபோது, பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் பாப்பரசருக்கு வழங்கப்பட்ட வரவேற்புபசாரத்தில் இலங்கையின் இந்து மதத்தவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆன்மீக தலைவராக பாப்பரசரோடு சோமசுந்தர பரமாச்சாரியர் விழா மண்டப மேடையில் அமர்ந்திருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இருந்தபோதிலும், சோமசுந்தர பரமாச்சாரியர் தம்மை எவ்வித அரசியல் சிக்கல்களுக்கும் யாழ்ப்பாணத்திலோ அல்லது தேசிய அளவிலோ ஈடுபடுத்திக்கொள்ளாது இருப்பது வரவேற்புக்குரியதாகவே இருக்கின்றது.

இந்நிலையில், வேலன் சுவாமி என்ற ஆன்மீக துறை சார்ந்தவரை அரசியலுக்குள் கொண்டுவரும் யோசனையை முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் அவரோடு இணைந்த சிலரும் வைத்திருப்பது, வடக்கு-கிழக்கு அரசியலும் காவி உடையின் செல்வாக்கை முன்னிறுத்தும் முயற்சிகள் முன்வைக்கப்படுகின்றனவோ என்ற எண்ணத்தை தோற்றம் பெறச்செய்கின்றது. இம்முயற்சி வடக்கு-கிழக்கு அரசியல் கோதாவில் ஆளுமையுள்ள அரசியல்வாதிகள் இல்லாதிருக்கின்றனரோ என்ற எண்ணத்தையும் ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 18 ஞாயிற்றுக்கிழமை
சித்திரை - 5

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 4.30 - 6.00 |
| திதி | : | சஷ்டி |




18.04.2021

**மேடம்**
முன்னேற்றம் காண்பீர்கள். உடன்பிறந்தவரின் அன்பு கிடைக்கும். உபரி நிதி சந்தோஷம் தரும். உறவினர்களுடன் பேசி மகிழ்வீர்கள். சக ஊழியரிடையே சண்டைகள் நீங்கி சமாதானம் ஏற்படும்.

**இடபம்**
நிதி தேவைகள் நிறைவடையும். சேமிப்பு அதிகரிக்கும். சுபச்செலவுகள் ஏற்படும். மனதில் சந்தோஷம் நிறையும். நல்லவர்களின் ஆதரவையும், ஆசியையும் பெற்று மகிழ்வீர்கள்.

**மிதுனம்**
எதிர்பார்த்த இடத்திலிருந்து சுபச்செய்தி வந்து சேரும். வருமானம் சற்றே உயர்வது பற்றிய செய்தி வந்து மகிழ்விக்கும். பெரியோர்களுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும்.

**கடகம்**
தனிப்பட்ட விஷயத்துக்காக அன்றாட பணிகளை மறக்காதீர்கள். சமூக அக்கறையுடன் செய்யும் செயல்களால் மனம் நிறையும். தொல்லை கொடுத்து வந்த மேலதிகாரி விலகுவார்.

**சிம்மம்**
தொழிலிலும் பணியிடத்திலும் இருந்து வந்த போட்டிகள் குறையும். குடும்பத்தில் ஒருவர் மாற்று மருத்துவத்தைத் தேர்ந்தெடுப்பார். பயம் தீரும். செலவுகள் குறையும். நண்பருக்கு உதவி செய்வீர்கள்.

**கன்னி**
பெற்றோரை அனுசரித்து அவர்களை சந்தோஷப்படுத்துவீர்கள். அலுவலகத்தில் வரும் செய்தி ஒன்று அனைவருக்கும் மகிழ்ச்சி தரும். நீங்கள் மிக விரும்பிய உணவை உண்டு மகிழ வாய்ப்பு வரும்.

**துலாம்**
புதிய நபர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நாள். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கலாம். கவனம் தேவை. பணியிடத்தில் தேவையின்றிப் பகையைச் சம்பாதிக்க வேண்டாம்.

**விருட்சிகம்**
செலவுகளையும் பேச்சையும் குறைத்துக் கொள்வது நல்லது. தவறு செய்யத் தூண்டுபவர்களிடம் எச்சரிக்கையாக இருங்கள். நெருங்கிய உறவினரின் செயல்பாடுகளால் சந்தோஷம் அதிகமாகும்.

**தனுசு**
பெற்றோரின் ஆரோக்கியம் மேம்படும். மனதில் நிம்மதி ஏற்படும். கூடுதல் முயற்சியால் நினைத்த விஷயம் நன்கு நிறைவேறும். முன்பு செய்த முயற்சிகளுக்கு இப்போது பலன் கிடைக்கும்.

**மகரம்**
தடுமாற்றம் அகலும். உழைப்பால் நன்மை பெறுவீர்கள். நெருங்கிய நண்பர் ஒருவரின் சந்திப்பால் பிரச்னைகள் தீரும். இளைஞர்கள் முயற்சியால் முன்னேறும் நாள். அமைதி கூடும்.

**கும்பம்**
முயற்சிகளில் ஏற்பட்ட தடைகள் தீரும். புதிய நம்பிக்கை வரும். விலகிய சொந்த பந்தங்கள் உங்கள் முயற்சி காரணமாக இணையும். பணியிடத்தில் உள்ள சூழல் முன்பை விட ஓரளவு திருப்தி தரும்.

**மீனம்**
நிதானத்துடன் செயல்பட்டு பிரச்னையில் இருந்து விலகுவீர்கள். கடன் பிரச்னையை குறைப்பதற்கு வழிகள் கண்டு மகிழ்வீர்கள். முயற்சிகளைத் தள்ளிப் போட வேண்டாம். நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

# நடிகர் விவேக் மரணம்! பிரபலங்கள் இரங்கல்!!

சென்னை, ஏப். 18

மாரடைப்பால், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நடிகர் விவேக் நேற்று சனிக்கிழமை அதிகாலை 4.35 மணியளவில் மரணமானார். அவருக்கு வயது 59.

சென்னையில் வசித்து வந்த நடிகர் விவேக், மாரடைப்பு காரணமாக நேற்றுமுன்தினம் வடபழனியிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு, ஆஞ்சியோ, எக்மோ சிகிச்சைகள் வழங்கப்பட்டன. ஆனால், அவை பலனளிக்காமல் நேற்று அதிகாலை மரணமானார் என்று மருத்துவமனை தரப்பு தெரிவித்தது.



நடிகர் விவேக், நகைச்சுவை, குணச்சித்திர பாத்திரங்களில் 500 இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார். திரைத்துறை மூலம் சமூக சிந்தனைகளை கூறிய அவர் சிறந்த சமூக சேவையாளர், பேச்சாளர் எனப் பன்முகத் தன்மை கொண்டவராகத் திகழ்ந்தார்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் நினைவாக மரங்களை நடுகை செய்து வந்த அவர், இதுவரை 33 இலட்சத்து 23ஆயிரம் மரக்கன்றுகளை நட்டுள்ளார்.

அவரது உடல், சாலி கிராமத்திலுள்ள அவரின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. அவரது உடலுக்கு திரையுலக பிரபலங்கள், அரசியல் பிரமுகர்கள் ரசிகர்கள் எனப் பலரும் சென்று அஞ்சலி செலுத்தினர்.

இந்தியப் பிரதமர் மோடி, தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின், நடிகர்கள் ரஜினிகாந்த், கமல் ஹாசன், கவிப்பேரரசு வைரமுத்து எனப் பலரும் அவரின் மறைவுக்கு இரங்கல்களை தெரிவித்துள்ளனர்.

இவரின் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை விருகம்பாக்கம் மின் மயானத்தில் பொலிஸ் மரியாதையுடன் இடம்பெற்றது. (ஐ)



## சுற்றுச்சூழல், சமூக அக்கறையை திரையில் பிரதிபலித்தவர் விவேக்

### இந்தியப் பிரதமர் இரங்கல்

புதுடில்லி, ஏப். 18

சுற்றுச்சூழல் மற்றும் சமூகத்தின் மீதான அக்கறையை தனது திரைப்படங்களில் பிரதிபலித்தவர் நடிகர் விவேக் என்று பிரதமர் மோடி அவருக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

நடிகர் விவேக் நேற்று மாரடைப்பால் காலமானார். அவரின் மறைவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது ருவிட்டர் பக்கத்தில் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அதில், “பிரபல நடிகர் விவேக்கின் அகால மரணம் பலரை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. நடிகர் விவேக்கின் நகைச்சுவை மற்றும் அறிவுபூர்வமான வசனங்கள் மக்களை மகிழ்வித்தன. அவர் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத்தின் மீதான அக்கறையை தனது திரைப்படங்களில் பிரதிபலித்தார். அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், அபிமானிகளுக்கும் எனது இரங்கல். ஓம் சாந்தி” என்று பதிவிட்டுள்ளார்.

## மீனாட்சி அம்மன் திருவிழா பக்தர்களுக்கு அனுமதி மறுப்பு!

### உயர் நீதிமன்றமும் உறுதி செய்தது

சென்னை, ஏப். 18

உலகப் பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் சித்திரை திருவிழாவில் பக்தர்கள் பங்கேற்க அனுமதி மறுத்துள்ளது உயர் நீதிமன்றம். கொரோனா தொற்று பரவலைத்தடுக்க விதிக்கப்பட்ட தடையை மாற்றியமைக்க நீதிமன்று விரும்பவில்லை என்று இதன்போது நீதிபதிகள் தெரிவித்தனர்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் சித்திரை திருவிழாவை பாரம்பரியம் மாறாமல் நடத்துமாறும், இதில் பங்கேற்க பக்தர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும் கோரி தொடரப்பட்ட வழக்கிலேயே உயர் நீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பை வழங்கியுள்ளது. இதேவேளை, சுவாமி தரிசனத்துக்கு பக்தர்கள் அனுமதிக்கப்டும் போது சிறப்பு பாஸ், வி.ஐ.பி. பாஸ் என்பவற்றை தவிர்த்து அனைவரும் வழிபட அனுமதிக்குமாறும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## சென்னை வாக்குச்சாவடியில் நேற்று மறு வாக்குப் பதிவு!

சென்னை, ஏப். 18

சென்னை வேளச்சேரி தொகுதிக்கு உட்பட்ட 92ஆவது எண் வாக்குச்சாவடியில் நேற்று காலை 7 மணி தொடக்கம் மறு வாக்குப் பதிவு இடம்பெற்றது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் கடந்த 6ஆம் திகதி நடந்தது. வாக்குப்பதிவு முடிந்ததும் மின்னணு இயந்திரங்கள் அனைத்தும் முத்திரையிடப்பட்டு வாக்கு எண்ணும் மையங்களுக்கு அனுப்பப்பட்டன.

சென்னை வேளச்சேரி தொகுதியில் உள்ள சீதாராம் நகர் டி.ஏ.வி. பாடசாலையில் 92ஆவது ஆண்கள்வாக்குச்சாவடியில்இருந்து 2 மின்னணு இயந்திரங்கள், ஒரு கட்டுப்பாட்டு இயந்திரம் மற்றும் ஒரு வி.வி. பாட் இயந்திரத்தை விதிகளை மீறி இரு சக்கர வாகனத்தில் ஊழியர்கள் எடுத்துச் சென்றனர். இதனால் சர்ச்சை ஏற்பட்டது. இதையடுத்து அவர்கள் இடை நீக்கம் செய்யப்பட்டனர்.

விசாரணையில் வி.வி. பாட் இயந்திரத்தில் மட்டும்15 வாக்குகள் பதிவாகியிருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து, இந்த வாக்குச்சாவடியில்




மறுவாக்குப்பதிவு நடத்த தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. இந்த வாக்குச்சாவடியில், 548 ஆண் வாக்காளர் கள் மட்டும் வாக்களிக்க முடியும். அவர்களுக்கு இடது கை நடுவிரலில்அழியாத மை வைக்கப்படுகிறது.

வேளச்சேரி தொகுதியில் 23 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். மறு வாக்குப்பதிவு நேற்றிரவு 7 மணிக்கு முடிவடைந்தது. மறுவாக்குப்பதிவு நடப்பதை முன்னிட்டு, வாக்குச்சாவடி அமைந்துள்ள பகுதியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியின் பின்னணியில்.....

மாலி

# “நான் யாழ்ப்பாணம் செல்வது பாதுகாப்பானதா?”

## கொழும்பில் இளவரசர் பிலிப்

பிலிப் கோமகன் - ஒரு தனித்துவமான வாழ்வு வாழ்ந்த ஒரு தனி மனிதர். இருந்ததையெல்லாம் துறந்து, அரிதானதையெல்லாம் அடைந்தவர்.

சிவனின் சக்தியானவர் (Consort) பார்வதி. பிலிப் கோமகன், மகாராணி இரண்டாம் எலிஸபெத்தின் சக்தியாக (Consort), காலம்வரையிலும் நிறைந்தவர். கிரேக்க - டனிஸ் இளவரசராகவே பிறந்தவர் அதனையும், தன் குடும்ப பெயரையும்கூட துறந்து, தாய் மாமன் வழி குடும்பப் பெயருடன் பிரிட்டிஷ் பிரஜையாகி, இளவரசி எலிஸபெத்தின் விருப்பில் அவரின் கரம்பற்றினார். அரசி எலிஸபெத்தின் துணைவர் (Consort) என்பது, அவரின் நித்திய பதவியாகியது.

பிரிட்டிஷ் அரச சம்பிரதாயத்தில் முடிக்குரிய இளவரசராக இருந்தவரே முடிசூடலின் பின்னர் மன்னர் என்று அழைக்கப்படுவார். மன்னரின் மனைவி அரசி



என்றும் அழைக்கப்படுவார். ஆனால், முடிக்குரிய வாரிசாக இளவரசியொருவர் முடிசூடும்போது, அவரது கணவர் மன்னர் என்று அழைக்கப்படுவதில்லை. 1947இல் மணமுடித்த இளவரசி எலிஸபெத், தந்தையாரான ஆறாம் ஜோர்ஜ் மன்னர் 1952இல் காலமானபோது அரசியானார். கணவர் பிலிப், ‘எடின்பரோ கோமகன்’ என்றே அப்போது அழைக்கப்பட்டார். பின்னர் அரசியின் ஏற்பாட்டில் 1957இல், பிரிட்டிஷ் இளவரசராக கணவர் பிலிப் பக்கிங்ஹாம் மாளிகையால் அறிவிக்கப்பட்டார்.

பிரிட்டிஷ் அரச கடற்படையில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த கிரேக்க - டனிஸ் இளவரசர் பிலிப், டாட்மத் கடற்படைக் கல்லூரிக்கு சுற்றுலா சென்ற 13 வயது இளவரசி எலிஸபெத்துக்கும் சகோதரி மார்க்கிரட்டுக்கும் அங்கு பாதுகாப்புக்காக மவுண்பேட்டன் பிரபுவால் அமர்த்தப்பட்டபோது, இளவரசி எலிஸபெத் அவர்மீது லயிப்புற்றார். மவுண்பேட்டன் பிரபு இருவருக்கும் உறவுக்காரர்.

மவுண்பேட்டன் என்ற பெயரே பிரிட்டிஷ் பிரஜையான பிலிப்பின் குடும்ப பெயராகவுமிருக்கிறது. இவர்களின் இந்த முதல் சந்திப்பு காலத்தில் நிகழ்ந்த இன்னொரு முதல் சம்பவம், இளவரசர் பிலிப்பின் இறுதிச் சடங்குகள் நிகழும் இவ் வேளையில் உலக செய்தியாகியிருக்கிறது. இளவரசர் பிலிப் வாங்கிய முதலாவது மோட்டார் கார், கொழும்பு காலிமுக ஹோட்டலில் அரச காட்சிப் பொருளாக இப்போது இருக்கிறதென்ற செய்தி அது.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது பிரிட்டிஷ் கடற்படையில் இந்து சமுத்திர பிராந்தியத்தில் கடமை புரிந்துகொண்டிருந்த இளவரசர் பிலிப், பிரிட்டிஷ் இலங்கையிலும் பணியாற்றினார். கொழும்பு, பிரிட்டிஷ் கடற்படை முகாமில் இருந்த வேளை 1940இல், தன்னுடைய முதலாவதாக இந்த Standard Nine காரை 12 ஸ்ரேலிங் பவுண்களுக்கு வாங்கினார். கொழும்பிலிருந்து திருகோணமலை கடற்படை முகாமுக்கு அவர் இக்காரை முதன்முதலாக ஓட்டிச் சென்றார்.

காலிமுக ஹோட்டலின் உரிமையாளரான தன்னுடைய தந்தையார் சிறில் காடினர் 1950இல் இக் காரைப் பின்னர் வாங்கியதாக கூறும் ஹோட்டல் உரிமையாளர் சஞ்சீவ் காடினர், இந்த தகவல்களைத் தெரிவிக்கிறார். இளவரசர் பிலிப், காருக்குரிய இப்பணத்தை இரண்டு தவணைகளில் செலுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

1947 நவம்பர் 20ஆம் திகதி அரச திருமணம் நடைபெற்றது. 1952 பெப்ரவரி 6ஆம் திகதி தந்தையார் இறந்தபோது, 1953 ஜூன் 2ஆம் திகதி எலிஸபெத் முடிசூடினார்.

மகாராணி எலிஸபெத் இரண்டு தடவைகள் இலங் கைக்கு விஜயம் செய்தார். 1954இல் முதன்முதலில் வந்த போது, காலிமுக




ஹோட்டலில் தன்னுடைய காரை இளவரசர் பிலிப் பார்த்துச் சென்றாராம். “இப்போது ‘பிரேக்’ ஒழுங்காக வேலைசெய்யும் என்று நம்புகிறேன் அப்போது அவை வேலை செய்யவில்லை” - காரைப் பார்த்தபடி இளவரசர் பிலிப் இப்படி கூறினாராம். இதுதான் இளவரசர் பிலிப்.

எப்போதுமே ஹாஷ்யமான பேச்சு அவருடையது. இது, பல தடவைகளில் சங்கடங்களையும் சர்ச்சைகளையும் ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், அவரின் இந்த நகைச்சுவைச் சிரிப்பே மகாராணியை அவருடன் இணைத்து வைத்திருக்கும் பிணைப்பு என்று அரண்மனை வட்டாரங்களில் சொல்லப்படுகிறது. மகாராணியின் சகிப்புத் தன்மை இது என்று இளவரசர் பிலிப் சொல்வார்.

தன்னுடைய பலமாகவும் வழிகாட்டியாகவும் இளவரசர் பிலிப் விளங்குகிறார் என்று மகாராணி எலிஸபெத் தனது பொன்விழாவின்போது கூறியிருந்தார்.

முதலாவது விஜயத்தின்போது, பேராதனை பல்கலைக்கழகத்தை இளவரசர் பிலிப் திறந்துவைத்தார். ‘குண்டுவீச்சுக் காலத்து லண்டன் கடைக்காரர்களைப் போல, இந்த இடம் வழமைக்கும் அதிகமாக, எந்நேரமும் திறந்திருக்கவேண்டும்’ என்று கூறி, அவர் அதனைத் திறந்துவைத்தார். மகாராணியின் 28ஆவது பிறந்ததினத்தையும் அவர்கள் இலங்கையில் தங்கியிருந்த இவ்வேளையில் ஏப்ரல் 21ஆம் திகதி கொண்டாடினர். ஈஸ்டர் தினம், நுவரெலியாவில் தங்கியிருந்தனர்.

இரண்டாவது இலங்கை விஜயம் 1981இல் இடம்பெற்றபோது, நாடு சற்று கலவர நிலையில் இருந்தது. இந்த விஜயத்தின்போது மகாராணியும் இளவரசரும் பத்திரிகையாளர்களுக்கு ஒரு தனிப்பட்ட



தேநீர் வரவேற்பு ஒன்றை அளித்தனர். இதற்கு 20 உள்ளூர் பத்திரிகையாளர்களும் 25 வெளிநாட்டு பத்திரிகையாளர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். ‘ஈழநாடு’ நிருபரான நானும் அழைக்கப்பட்டிருந்தேன். மகாராணிக்கும் இளவரசருக்கும் ஒவ்வொருவராக அறிமுகம்செய்துவைக்கப்பட்டு, இருவருடனும் கைலாகு கொடுத்து, 45 நிமிடங்கள் அவர்களுடன் பேசி செலவிட்டோம். மகாராணியுடன் உடனிருக்கும் அமைச்சராகவிருந்த காமினி திஸாநாயக்க ‘ஈழநாடு’ பத்திரிகையையும் என்னையும் அறிமுகம்செய்தபோது, யாழ்ப்பாணத்து நிலைமகளை உன்னிப்புடன் வினவிக் கேட்ட இளவரசர் பிலிப், ‘இப்போது நான் அங்கு செல்வது பாதுகாப்பானதா?’ என்று ஒரு கேள்விக் குண்டைத் திடீரென்று போட்டார். அவர்கள் இலங்கையில் தங்கியிருந்த அவ்வேளையில், ஒரு வங்கிக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்று, இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டுமிருந்தார்.

பத்திரிகையாளர்களுக்கான இவ்வரவேற்பு மகாராணியினதும் இளவரசரினதும் தனிப்பட்ட ஒரு நிகழ்வு என்றும், அழைப்பினைப்பெற்ற பத்திரிகையாளர்கள் புகைப்பட, ஒலிப்பதிவு சாதனங்களையோ, குறிப்புப் புத்தகங்களையோ கொண்டுவரவேண்டாம் என்றும் கோரப்பட்டிருந்தனர். சுதந்திரத்துக்குப் பின்னர், பிரிட்டிஷ் தூதரக பாவனைக்காக கறுவாத் தோட்டத்திலுள்ள விஜேராம மாவத்தையில் இலங்கை அரசிடம் நீண்டகால குத்தகைக்குப் பெறப்பட்ட காணியில் அமைந்த Trenchard House இல் இந்த வரவேற்பு நிகழ்ந்தது.

இளவரசர் பிலிப் பல்வேறு இடங்களிலும் நகைச்சுவையாக பேசியவை பல பொதுவாக அறியப்பட்டவை. எடின்பரோ தொழிற்சாலையொன்றில் பழைய தாய்த் தெரிந்த Fuse box ஒன்றைக் காண்பித்து, ‘யாரோ ஓர் இந்தியர் இதனைப் பொருத்தியிருப்பார் போலிருக்கிறது’ என்றார். (1999)

லூட்டன் மருத்துவமனையில் பிலிப்பைன்ஸ் நாட்டு தாதி ஒருவரைப் பார்த்து, ‘நீங்கள் எல்லோரும் எமது சுகாதார சேவையில் இங்கு பணியாற்றுகிறீர்கள் பிலிப்பைன்ஸில் அரைவாசி நிச்சயம் மக்களற்று வெறுமையாகவே இருக்கும்’. (2013)

சீனாவில் பிரிட்டிஷ் மாணவர்களைப் பார்த்து, ‘இங்கு நீண்ட நாள்கள் தங்கியிருந்தால் சற்று மூடிய கண்களுடன்தான் நீங்கள் வீடு திரும்புவீர்கள்’. (1980)

ஸ்கொட்லாந்து சாரதி பயிற்றுநர் ஒருவரிடம், ‘சித்தியெய்தும்வரை எப்படி ஊரவர்களைக் குடிக்காமல் உங்களால் வைத்திருக்கமுடிகிறது?’ (1995)

இவை எப்படியிருந்தாலும், சில இராஜதந்தர விஜயங்களின்போது இளவரசர் பிலிப்பின் சில ஹாஷ்யங்கள் சிக்கலானவையாகவும் இருந்திருக்கின்றன. 2003இல் நைஜீரியாவுக்கு விஜயம்செய்தபோது, தேசிய உடையில் நைஜீரிய அதிபர் ஒபசன்ஜோவைப் பார்த்து, ‘படுக்கைக்கு தயார் போலிருக்கிறது’ என்று பிலிப் இளவரசர் கூறினார்.

ஆக, 2019இல் அவருடைய 97ஆவது வயதில், விபத்து ஒன்றில் இருவரைக் காயப்படுத்தியதில் தன்னுடைய வாகன ஓட்டுநர் அநுமதி பத்திரத்தை ஒப்படைத்து, நூறு வயதுக்கு இரண்டு மாதங்கள் குறைவாயிருக்க, தனித்துவம் மிக்க ஒரு தசாப்த வாழ்வை அவர் முடித்தார்.

# விஜயதாஸ மீது விரைவில் ஒழுக்காற்று நடவடிக்கை

## அரச தரப்பு எச்சரிக்கை



கொழும்பு,ஏப்.18

சிறிலங்கா பொதுஜன பெர முனவின் பாராளுமன்ற உறுப் பினர் விஜயதாஸ ராஜபக்ஷ மீது விரைவில் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல எச்சரித்துள்ளார்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் குற்றச் சாட்டுக்களை முன்வைத்த விஜயதாஸ, யதார்த்தத்தை புரிந்துகொள்ளாதமை வருத்தமளிப்பதாகவும் கெஹலிய குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக் கையில்: நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும் நடவடிக்கை களை அரசாங்கம் ஒருபோதும் எடுக்காது. என்றும் நாட்டின் வளங்களை வெளிநாட்டுக்கு விற்கப்போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு தொடர்பான சட்டமூலம் குறித்து கருத்து தெரிவித்த மையை அடுத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னை மிரட்டியதாக விஜயத ாஸ ராஜபக்ஷ குற்றம்சாட்டி யிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ)

# 221 பேர் குணமடைவு

கொழும்பு, ஏப். 18

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 221 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள நாளாந்த புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 92,832ஆக உயர்வடைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த ஆண்டு மட்டும் 52 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஏப். 18

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 52 ஆயிரத்து 710 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் 1,593 பேர் வெளிநாடுகளில் இருந்து தாயகம் திரும்பிவர்கள் என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் பதிவாகிய மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 96 ஆயிரத்து 186 ஆக உயர்ந்துள்ள நிலையில் அவர்களில் 92 ஆயிரத்து 611 பேர் குணமடைந்துள்ளனர்.

தற்போது 2960 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வரும் நிலையில் 615 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டிலிருந்து வருவோருக்கு இங்கு இறுக்கமான கட்டுப்பாடுகள்

கொழும்பு, ஏப். 18

வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்குள் பிரவேசிப்பவர்களில் அதிகமானோருக்கு கொரோனா தொற்றுறுதியாவதன் காரணமாக, அவர்கள் தொடர்பில் முகாமைத்துவ நடவடிக்கை செய்ய நேரிடும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்தியர் சுதத் சமரவீர இதனை தெரிவித்துள்ளார்.

வைரஸ் தொற்று சமூகத்திற்குள் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்குள் பிரவேசிப்பவர்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்க நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களை பின்பற்றாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொதுமக்கள் சுகாதாரம் தொடர்பான பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் எஸ்.எம் ஆனல்ட் தெரிவித்துள்ளார்.

# ‘வாழ்க்கைக்கான தோட்டம்’ திட்டம் மன்னாரில் ஆரம்பம்

மன்னார்,ஏப்.18

முருங்கை மரத்தின் மருத்துவ மதிப்பு மற்றும் பொருளாதாரப் பெறுமதியை மக்களிடம் பிரபல்யபடுத்துவதற்கான “வாழ்க்கைக்கான தோட்டம்” தேசிய வேலைத்திட்டத்தின் மாவட்ட மட்ட ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை 9 மணியளவில் மன்னார் முருங்கன் கமநல சேவைகள் நிலையத்தில் இடம்பெற்றது.

கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் அன்ரனி மெரின் குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் அபிவிருத்திக் குழுவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. ஸ்ரான்லி டி மேல், நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் திருச்செல்வம் பரஞ்ஜோதி ஆகியோர் கலந்து கொண்டனர்.



மன்னார் மாவட்டத்தில் சுமார் 13 ஆயிரம் முருங்கை மரக்கன்றுகளை இலவசமாக வழங்கும் குறித்த நிகழ்வில் 400 முருங்கை மரக்கன்றுகள் முருங்கன் கமநல பிரிவு பகுதி மக்களுக்கு வழங்கப்பட் டன. இதன்போது கர்ப்பவதிகளுக்கு முருங்கை மரக் கன்றுகள் வைபவ ரீதியாக வழங்கி வைக்கப்பட்டன.

முருங்கை மரத்தின் மருத்துவ மதிப்பு மற்றும் பொருளாதாரப் பெறுமதியை மக்களிடம் பிரபல்யபடுத்துவதற்கான வாழ்க்கைக்கான தோட் டம் என்னும் தேசிய வேலைத் திட்டத்துக்கமைய புதுவருடத்தில் தலையில் எண்ணெய் வைக்கும் சுபநேரத்தில் வைபவ ரீதியாக குறித்த தேசிய வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விவசாய அமைச்சு, விவசாய கமநல அபிவிருத்தித் திணைக்களம், கல்வி அமைச்சு ஆகியவை இணைந்து குறித்த திட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களாக செயல்படுகின்றன. (எ)

# அதிரடிப்படை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர்களுக்கு விளக்கமறியல்

வடமராட்சி முள்ளிப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இருவரையும் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் காயமடைந்த இருவரும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

அவர்களுடன் காணொலித் தொடர்புத் தொழில்நுட்பம் மூலம் விசாரணை மேற்கொண்ட பதில் நீதிவான் அவர்கள் இருவரையும் எதிர்வரும் 30ஆம் திகதிவரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

காயமடைந்தவர்களில் ஒருவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவிலேயே தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# போலி தேரர் தொடர்பில் விசாரணை

கொழும்பு, ஏப். 18

தம்மை தேரர் என்று கூறிக் கொண்டு மீகலேவ - ரெஸ்வேஹர ரஜமஹா விகாரைக்கு சென்று அங்கிருந்து தப்பிச் சென்ற நபர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனை தெரிவித்தார்.

குறித்த நபர் தம்மை தேரர் என்று கூறி நேற்று முன்தினம் பிற்பகல் குறித்த விகாரைக்கு சென்றுள்ளார்.

அவர் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்ட நிலையில் குறித்த நபர் அருகிலிருந்த கஹகல்ல வனப்பகுதிக்குள் தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் அவர் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் உடனடியாக மீகலேவ பொலிஸாருக்கு அறிவிக்குமாறு பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கோரியுள்ளார்.

# இளவரசர் பிலிப் வாங்கிய முதல் கார் கொழும்பில்!



கொழும்பு, ஏப். 18

பிரித்தானிய மகாராணி எலிசபெத் அம்மையாரின் மறைந்த கணவர் இளவரசர் பிலிப் பயன்படுத்திய முதலாவது கார் தற்போதும் கொழும்பில் கம்பீரமாக காட்சியளிக்கின்றது.

90 வருடங்கள் பழைமையான இந்தக் கார் கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டல்களில் ஒன்றான கோல்பேஸ் ஹோட்டலில் காட்சிப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 9ஆம் திகதி காலமான எடின்பரோ கோமகனின் இறுதிச் சடங்கு நேற்று நடைபெற்றது.

1940இல் பிரித்தானிய கடற்படைச் சேவைக்காக கொழும்பில் பணிக்கமர்த்தப்பட்டி ருந்தபோது 1935 ஸ்டாண்டர்ட் நைன் என்ற இந்தக் காரை 12 ஸ்ரேலிங் பவுண்ஸ்களுக்கு மறைந்த இளவரசர் பிலிப் கொள்வனவு செய்திருந்தார்.

“1950களின் ஆரம்பத்தில் இளவரசர் பிலிப் இலங்கைக்கு விஜயம் செய்தபோது அவர் தன்னுடைய முதலாவது காரை வந்து பார்வையிட்டார் “என தற்போது அந்தக் காருக்கு உரிமையாளராக திகழும் கோல்பேஸ் ஹோட்டல் உரிமையாளர் சஞ்சீவ் கார்டினர் கூறுகின்றார்.

“தற்போது காரின் பிரேக்குகள் வேலை செய்கின்றன என நம்புகின்றேன். அப்போது அவை வேலைசெய்யவில்லை” என நகைச்சுவையாக இளவரசர் பிலிப் கூறியதாக சஞ்சீவ் கார்டினர் மேலும் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின் போதே தாம் முதலாவதாக கொள்வனவு செய்த கார் இதுதான் என்பதை அவர் ஒப்புக்கொண்டிருந்தார். ஸ்டான்டர்ட் மோட்டார் கார் கழகத்தின் போசகராகவும் அவர் திகழ்ந்திருந்தார்.

இலங்கையிலுள்ள ஹோட்டல்களில் மிகப் பழைமையானவற்றில் ஒன்றாக விளங்கும் சஞ்சீவ் கார்டினரின் ‘கோல்ட்பேஸ் ஹோட்டல்’ தற்போது அந்த காரை மையப்படுத்தி ஒரு அருங்காட்சியகத்தை வடிவமைத்துள்ளது.

ஹோட்டலுக்கு விருந்திற்காக வரும் வாடிக்கையாளர்களும் சுற்றுலாப் பயணிகளும் இந்தக் காரை கண்டுகளித்து வருகின்றனர்.

இந்தக் காரை கொள்வனவு செய்தபோது காரின் விலைக்குரிய பணத்தை ஒரே நேரத்திலேயே இளவரசரால் கொடுக்க முடியாமல் போனது எனவும் இதனால் இரு தவணைகளாக அவர் பணத்தை ஒரே மாதத்தில் செலுத்தி முடித்ததாக அந்த அருங்காட்சியகத்தில் உள்ள ஆவணங்கள் கூறுகின்றன.

இளவரசர் பிலிப் கொழும்பிலிருந்து 260 கிலோமீற்றர்கள் தொலைவில் திருகோணமலையிலிருந்த கடற்படை தளமொன்றிற்கே முதன்முதலாக இந்தக் காரை செலுத்திச் சென்றதாக பதிவுகள் கூறுகின்றன.

இந்தக் காரின் மீற்றரைப் பார்க்கின்றபோது இதுவரை 93 040 கிலோமீற்றர்கள் பயணித்திருப்பதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

இன்னமும் இந்தக் கார் இயங்கக்கூடிய நிலையில் உள்ளபோதும் இதற்குள்ள அதி உயர் காப்புறுதிக் கட்டணம் காரணமாக வெளியே கொண்டுசெல்வதில்லை என இதன் உரிமையாளர் சஞ்சீவ் கார்டினர் தெரிவித்தார்.

சஞ்சீவ் கார்டினரின் தந்தை சிறில் கார்டினர் இந்தக் காரை 1950களின் ஆரம்பத்தில் கொள்வனவு செய்திருந்தார்.

1954ஆம் ஆண்டில் மகாராணி எலிசபெத் மற்றும் இளவரசர் பிலிப் ஆகியோர் இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தபோது அவர்கள் பயன்படுத்திய கார்டிலெக் என்ற காரையும் சஞ்சீவின் தந்தை சிறிலே வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

100ஆவது பிறந்த தினத்திற்கு சுமார் 2 மாதங்களே உள்ள நிலையில் கடந்த 9ஆம் திகதி காலமான இளவரசர் பிலிப் கார்கள் மீது பற்றுக் கொண்டவர் என்பதுடன் தாமே காரைச் செலுத்தும் வழக்கமுடையவர்.

எனினும், 2019ஆம் ஆண்டு தனது 97ஆவது வயதில் அவர் செலுத்திய கார் விபத்திற்குள்ளாகி இருவர் காயமுற்றதையடுத்து தனது வாகனம் செலுத்தும் அனுமதிப் பத்திரத்தை திரும்ப ஒப்படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளின் அனைத்துச் சொத்துக்களும் பறிமுதல்

## அமைச்சர் சரத் வீரசேகர அறிவிப்பு

கொழும்பு, ஏப். 18

**தடைசெய்யப்பட்ட 11 இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளுக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் அரசாங்கம் பறிமுதல் செய்யும் என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று சனிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், அந்த அமைப்புகளின் தலைவர்களிடமிருந்து தகவல் பெறப்படுவதாகவும் கூறினார்.

பறிமுதல் செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுக்க அவர்களின் சொத்து மற்றும் வங்கிக் கணக்குகள் தொடர்பான ஆவணங்கள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் தலைவர்கள் தொடர்பாகவும் விசாரணைகள் இடம்பெறுவதாகவும் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார். இந்த வாரம் அல்கொய்டா, ஐ.எஸ் உள்ளிட்ட 11 இஸ்லா மிய தீவிரவாத அமைப்பு களுக்கு தடை விதித்து வர்த்த மானி அறிவித்தல் வெளி யாகியிருந்தமை குறிப்பிடத் தக்கது.



# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்தாரிகளின் நூறு கோடி குடும்ப சொத்து பறிமுதல்!

கொழும்பு, ஏப். 18

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்ட சகோதரர்களின் சந்தையான கோடீஸ்வர தொழிலதிபர் இப்ராஹிம் ஹாஜியாரின் சொத்துக்களை பறிமுதல் செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுமார் 100 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படவுள்ளதாக அந்த செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 20 ஏக்கருக்கும் அதிகமான மிளகுத் தோட்டங்கள் மற்றும் வணிகங்களை இப்ராஹிம் குடும்பம் வைத்திருப்பதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்ய முடிவு செய்வதற்கு முன்னர், அவர்களுக்கு சொந்தமான ஒரு சொகுசு வீட்டை பதிவுகளில் மாற்றம் செய்து விற்பனை செய்ய முயற்சித்த குழு கைது செய்யப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாக்கப்பட்ட குடும்பஸ்தர் சிகிச்சை பயனின்றி பலி!

## கிளிநொச்சியில் துயரம்

கிளிநொச்சி, ஏப். 18

கிளிநொச்சி சிவபுரம் பகுதியில் குடும்பஸ்தர் அடித்துக்கொலை செய்யப்பட்டார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிவபுரம் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்த குடும்பஸ்தர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

சம்பவத்தில் 42 வயதுடைய 04 பிள்ளைகளின் தந்தையான மாயழகு மனோகரன் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்த 14ஆம் திகதி சித்திரைப்புத்தாண்டு அன்று இரவு 9 மணியளவில் சிவபுரம் கிராமத்தில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரு நபர்களுக்கிடையில் முரண்பாட்டின்போது வீதியால் பயணித்த குறித்த நபர் சம்பவ இடத்தில் முரண்பட்டுக்கொண்டிருந்த அவரது உறவினரிடம் என்ன சத்தம் என வினவியுள்ளார்.

இதன்போது குறித்த நபர் மீது மற்றைய நபர் தாக்குதல் மேற்கொண்டார் எனவும், தாக்குதல் மேற்கொண்டவர் மது போதையில் இருந்ததார் என்றும் சம்பவத்தை அவதானித்தவர்கள் குறிப்பிடுகின்றனர். இதனை அடுத்து தாக்குதலுக்குள்ளான நபரை கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

தொடர்ந்து அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பயனளிக்காது என தெரிவித்து மீண்டும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டார்.

இந்த நிலையில் குறித்த நபர் உயிரிழந்தார் என பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# உயிரிழந்தவருக்கு தாடி வளர்ந்ததால் பரபரப்பு!

கொழும்பு, ஏப். 18

மொனராகலை பிரதேசத்தில் நடந்த மரண வீட்டில், சவப்பெட்டியில் இருப்பது வேறொருவரின் சடலம் என்பது தெரிய வந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மொனராகலை, அதிலிவெவ பகுதியைச் சேர்ந்தவர் ஜே.ஏ.எல். ஞானதிலக (வயது-55).இரண்டு பிள்ளைகளின் தந்தையான அவர், கடந்த 9ஆம் திகதி மாலை கிணற்றில் விழுந்து உயிரிழந்தார்.

பொலிஸார் அவரது உடலை வெல்லவாய ஆதார மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். மறுநாள் சடலம் பிரேத பரிசோதனைக்காக மொனராகலை மாவட்ட பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கடந்த 12 ஆம் திகதி பிரேத பரிசோதனை நடத்தப்பட்டு, சடலம் அன்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

உறவினர்கள் அன்று மாலையே உடலை, மலர்ச்சாலை ஒன்றில் ஒப்படைத்தனர்.

அலங்கரிக்கப்பட்ட பெட்டியில் மறுநாள் (13) காலையில் உடல் வீட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

அன்று காலையில், உயிரிழந்தவரின் மகள் சடலத்தை பார்வையிட்டு அதிர்ச்சியடைந்தார்.

காரணம், தனது தந்தையின் தோற்றத்தை விட பருமனான தோற்றத்துடனும், தாடி வளர்ந்த நிலையிலும் சடலம் காணப்பட்டது. அவரது தந்தை தாடியை மழித்திருந்தார்.

உடனடியாக, குடா ஓயா பொலிஸாருக்கு தகவல் அளித்து சடலம் மொனராகலை மாவட்ட பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

ஒக்காம்பிட்டிய, மாலிகாவில பகுதியில் 11 ஆம் திகதி காட்டு யானை தாக்கி இறந்த அனுர குணரத்ன என்பவரின் சடலமே தவறுதலாக அனுப்பி வைக்கப்பட்டது தெரியவந்துள்ளது.

அனுர குணரத்தினவின் உறவினர்களிடம் வழங்கப்பட்ட ஞானதிலகவின் உடலை அவர்கள் புதைத்துவிட்டனர்.

தகவலறிந்த பின்னர் சடலம் மீள தோண்டியெடுக்கப்பட்டு உரிய வர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அன்று மாலையே இறுதிக்கிரியை நடந்தது. இது குறித்து மொனராகலை மாவட்ட வைத்தியசாலை நிர்வாகம் விசாரணை நடத்தி வருகிறது.

# ஜனாதிபதி மிரட்டினார் என விஜயதாஸ வெளியே சொல்லியிருக்கக்கூடாதாம்!

கொழும்பு, ஏப். 18

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு மிரட்டியதாக, பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ பகிரங்கமாக தெரிவிப்பது முறையான நடவடிக்கை அல்ல என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். கோட்டை ரஜமஹா விகாரையில் நடந்த நிகழ்வில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

துறைமுக நகர விவகாரம் தொடர்பான பிரச்னைகள் குறித்து அரசாங்க குழுக் கூட்டத்தில் விவாதித்து தேவையான விடயங்களை அவர் தெளிவுபடுத்தியிருக்கலாம். ஆனால், அவர் அப்படி எதுவும் செய்யவில்லை.

இலங்கை பொலிஸ் துறைமுக நகரத்தில் கடமையில் இருக்கும். நீங்கள் ஒரு ஹெலிகொப்டரை தரையிறக்க விரும்பினால், முறையான அனுமதி பெறவேண்டும்.

அத்தகைய பின்னணியில், விஜயதாஸ ராஜபக்ஷ சொன்னது தவறு. துறைமுக நகர திட்டம் இலங்கை பொருளாதாரத்தில் ஒரு திருப்புமுனையாகும். பல் வேறு தரப்புக்கள் இதை நாசப்படுத்த முயற்சிக்கின்றன. இது குறித்து எங்களுக்கு பெரும் சந்தேகம் உள்ளது.

எம்.பி. விஜயதாஸ ராஜபக்ஷவின் நடவடிக்கைகள் குறித்தும் எங்களுக்கு சந்தேகம் உள்ளது. ஏனெனில், அவர் அரசமைப்பின் 19 மற்றும் 20 திருத்தங்களுக்கு கையை உயர்த்திய பாராளுமன்ற உறுப்பினர். அவர் பல சந்தர்ப்பங்களில் கட்சிகளையும் மாற்றியுள்ளார்-என்றார்.

# சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் மக்களின் நடத்தை கவலை தருகிறது

## சுதத் சமரவீர சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 18

கொரோனா தொற்றுக்கு மத்தியில் சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் பொதுமக்கள் நடந்துகொண்ட விதம் வருத்தமளிப்பதாக தலைமை தொற்று நோயியல் நிபுணர் சுதத் சமரவீர கவலை வெளியிட்டுள்ளார்.

பொதுமக்களின் இந்த நடத்தைகளின் விளைவாக கடுமையான எதிர்மறையான தாக்கம் எதிர்காலத்தில் வெளிப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

சுகாதார ஆலோசனையைப் பொருட்படுத்தாமல் பொது மக்கள் தற்போது பொறுப்பற்ற வாழ்க்கை முறையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் சுதத் சமரவீர சுட்டிக்காட்டினார்.


இந்த நிலைமை தொடர்ந்தால் சுகாதார விதிமுறைகளை கடுமையான முறையில் செயற்படுத்தவேண்டி ஏற்படும் என சுதத் சமரவீர எச்சரித்துள்ளார்.

இதேவேளை, தடுப்பூசியின் இரண்டாவது டோஸை வழங்குவது தொடர்பான இறுதி முடிவை அடுத்த வாரம் சுகாதார அமைச்சு



அறிவிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடிகர் விவேக்
## ஜனங்களின் கலைஞனான கதை!

சுதர்சன் காந்தி

தமிழ் சினிமாவில் உள்ள நகைச்சுவை நடிகர்களின் வரலாற்றில் 'விவேக்' என்ற பெயருக்கு அத்தனை வலிமை இருக்கிறது. பொதுவாகவே, நகைச்சுவை நடிகர்கள் மக்களை எளிதில் கவர்ந்துவிடுவார்கள். அதில் விவேக் கொஞ்சம் 'ஸ்பெஷல்'. மக்களுக்கு தேவையான சீர்திருத்த கருத்துக்களை தன்னுடய படங்களில் பேசியவர். அந்த விசயம்தான் விவேக்கை ஜனங்களின் கலைஞன், சின்னக்கலைவாணர் ஆகிய பெயர்களை வாங்கிக் கொடுத்தது. மக்களுக் கான பல விசயங்களை திரையில் தன்னுடைய நகைச்சுவை உணர்வோடு சேர்த்து பேசிய நடிகர் விவேக் இனி நம்மோடு இல்லை என்ற செய்தி அனைவரையும் ஆழ்ந்த துயரத்தில் தள்ளியிருக்கிறது.

கோவில்பட்டியில் பிறந்தவர், மதுரை அமெரிக்கன் கல்லூரியில் எம்.கொம் படிப்பை முடித்தார். தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்திய தேர்வில் வெற்றி பெற்று அரசாங்க ஊழியராக தலைமை செயலகத்தில் பணியாற்றினார். ஆனால், நடிப்பின் மேல் அதீத ஆர்வம் இருந்ததால், அரசு பணியில் இருந்தா லும் நேரம் கிடைக்கும்போதெல்லாம் மெட் ராஸ் ஹியூமர் கிளப்பில் இணைந்து பணியாற் றினார். இயக்குநர் பாலச்சந்தர் இயக்கத்தில் வெளியான 'மனதில் உறுதி வேண்டும்' திரைப் படத்தில் சுஹாசினியின் தம்பியாக திரையில் அறிமுகமானார்.

இந்தப் படத்தில் அவர் நடித்த முதல் காட்சி என்ன என்பதை சமீபமாக ஆனந்த விகடன் இதழுக்காக பேசியிருந்தார். அதில், "என்னுடைய முதல் படம், பாலச்சந்தர் இயக்கத்துல 'மனதில் உறுதி வேண்டும்'. அந்தப் படத்தில நான் நடிச்ச முதல் நாளை பத்தி பேசுறது ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு. தி.நகர் ரங்கநாதன் தெரு பக்கத்துல ராமேஸ்வரம் தெருனு ஒண்ணு இருக்கு. அங்க காமகோடி வீடுனு ஒரு தனி வீட்டுலதான் ஷூட்டிங். இப்போ அந்த இடம் அப்பார்ட்மென்டா மாறிடுச்சு. அந்த வீட்டு மாடில இருந்து தடதடனு இறங்கி வந்து 'அக்கா வர்றாங்க அக்கா வர்றாங்க'ன்னு சொல்லணும். அப்புறம், சுஹாசினி உள்ள வருவாங்க. எப்படியிருக்கனு எல்லாம் கேட்பாங்க. அதுக்கெல்லாம் பதில் சொல்றதுதான் நான் நடிச்ச முதல் காட்சி. எங்களுடைய வசனம் எல்லாம் பேசி முடிச்சவுடன் நான் கமெராவைப் பார்த்து 'ஓகேவா சார்?'னு கேட்டுட்டேன். கே.பி சார் ரென்ஷனாகி 'அட அறிவுக்கெட்டவனே'னு திட்டிட்டு அப்புறம் கட் சொன்னார்.

சுஹாசினி என்கிட்ட, 'நம்ம வசனம் முடிஞ்சாலும் டைரக்டர் 'கட்'னு சொல்லுற வரைக்கும் நம்ம அந்தக் கேரக்டர்லயே இருக்கணும்'னு சொல்லிட்டு இருந்தாங்க. அப்போ டைரக்டர் வேகமா என்கிட்ட வந்தார். மறுபடியும் ஏதோ திட்டப்போறார்னு நினைச்சேன். ஆனா, அவர் என் காலை பார்த்துட்டு, 'என்னடா பண்ணி வெச்சிருக்க?'னு கேட்டார். வேகமா படிக்கட்டுல இருந்து இறங்கி வரும்போது கால் நகம் பெயர்ந்து இரத்தம் வந்திருந்தது. பாலச்சந்தர் சார் எவ்வளவு பெரிய ஜாம்பவான். ரஜினி, கமல்னு ரெண்டு உச்ச நட்சத்திரங்களை உருவாக்கினவர் இப்போ நம்மளை இயக்கிறார்னு சந்தோஷம் கலந்த பதற்றத்துல வேகவேகமா இறங்கி வந்ததுல அப்படியாகிடுச்சு. உடனே, மேக்கப் டீமை கூப்பிட்டு மீசைக்கு ஒட்டுற பசையை கொஞ்சம் அந்தக் காயத்துல போட்டு விட்டாங்க. அப்புறம்தான் இரத்தம் நின்னுச்சு. 'முதல் படத்துல அதுவும் முதல் காட்சியிலேயே இரத்தம் சிந்தி நடிக்கிறான்டா இவன்'னு சொல்லி சிரிச்சார் கே.பி சார். என்னுடைய முதல் காட்சியில திட்டும் வாங்கிட்டேன், பாராட்டும் வாங்கிட்டேன். அப்படி ஆரம்பமான இந்த வண்டி இத்தனை வருஷமா ஓடிக்கிட்டு இருக்கு. மோதிரக் கையால குட்டு வாங்கியிருக்கோம்ல..!" என்றார் மகிழ்ச்சியாக.

பாலச்சந்தர் கண்டெடுத்த முத்துக்களில் மிக முக்கியமானவர் விவேக். அடுத்தடுத்து அவருடைய இயக்கத்தில் நடித்துக் கொண்டிருந்தவருக்கு, பின் ஏகப்பட்ட வாய்ப்புகள் வந்தன. சின்னப் படம், பெரிய படம் என்று பார்க்காமல் கிடைத்த வாய்ப்புகளை எல்லாம் மிகச் சரியாக பயன்படுத்தி நகைச்சுவை நடிகராக உச்சத்திற்கு சென்றார். 1987ஆம் ஆண்டு அறிமுகமாகியிருந்தாலும் 2000-களின் தொடக்கத்தில் இருந்து விவேக் இல்லாத படங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். ரஜினி, கமல், விஜய், அஜித், விக்ரம் என தொடங்கி இப்போதைய இளம் நாயகர்களான ஹிப்ஹாப் ஆதி, ஹரிஷ் கல்யாண் வரை தொடர்ந்து உற்சாகமாக பயணித்து வந்தார். விஜய், அஜித்துடன் தொடர்ந்து எக்கச்சக்கமான படங்களில் பணியாற்றினார்.

படங்களின் பெயர்கள் மக்களின் நினைவில் இல்லாமல் போனாலும் இவருடைய நகைச்சுவை காட்சியை சொன்னால் உடனுக்குடன் நினைவுக்கு வருமளவிற்கு இவரது நடிப்பும் நகைச்சுவை உணர்வும் தனித்துவம் கொண்டது. வடிவேலு ஒரு பக்கம் உச்சத்தில் சென்று கொண்டிருக்க, மறுபக்கம் தனக்கான பாணியில் பரபரப்பாக இயங்கி வந்தவர், விவேக். கருத்துக்களுடன் கூடிய நகைச்சுவை காட்சிகளை எழுதி நடிப்பதுதான் விவேக்கின் ஸ்ரைல்.

எம்.ராதா, என்.எஸ்.கிருஷ்ணன் ஆகியோரைத் தொடர்ந்து, சீர்திருத்த கருத்துக்களை தன்னுடைய வசனங்களில் பேசிவந்தார். 2019ஆம் ஆண்டு விஜயுடன் 'பிகில்', அஜித்துடன் 'விஸ்வாசம்' ஆகிய படங்களில் நடித்தார். நீண்ட நாள்களுக்கு பிறகு, விஜய், அஜித் ஆகியோருடன் இணைந்து நடித்திருந்தார். நகைச்சுவை பாத்திரங்களில் தூள் கிளப்பிவந்த விவேக், சமீபகாலமாக குணச்சத்திர கதாபாத்திரங்களில் பயங்கரமாக ஸ்கோர் செய்தார்.

'தாராள பிரபு' படம் ஹிந்தியில் வெளியாகி ஹிட்டான 'விக்கி டோனார்' படத்தின் மீளுருவாக்கம் என்றாலும் டாக்டர் கண்ணதாசன் என்ற பாத்திரத்தில் இவருடைய பங்கு அபாரமானது. அந்தப் படத்தை மிக அழகாக தாங்கிச் சென்றது விவேக் தான். இவர் முதன்மை பாத்திரத்தில் நடித்த 'வெள்ளை பூக்கள்' திரைப்படமும் நல்ல வரவேற்பைப் பெற்றது.

30 வருட சினிமா பயணத்தில் இன்னும் கமல்ஹாசனுடன் இணைந்து நடிக்கவேயில்லை. 'இந்தியன் 2' படத்தில்தான் முதன்முதலாக கமலுடன் இணைந்தார். குணச்சித்திர கதாபாத்திரங்களில் நடிக்க நிறைய படங்களில் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். இளம் இயக்குநர்கள், இளம் நாயகர்கள் என இந்தக் காலத்து இளைஞர்களோடு பயணிப்பது விவேக்கிற்கு மிகவும் பிடிக்கும். மறைந்த முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாமிற்கு மிகவும் நெருக்கமானவர். 'கிரீன் கலாம்' என்ற பெயரில் தொடர்ந்து, இலட்சக்கணக்கான மரக்கன்றுகளை நட்டு வந்தார். அவருடைய இலக்கு தமிழ்நாட்டில் ஒரு கோடி மரக்கன்றுகளை நட வேண்டும் என்பதுதான்.

இயற்கை மீது எவ்வளவு நேசமும் அக்கறையும் உள்ளதோ அதே அளவிற்கு, இசை மீது அதீத காதல் கொண்டவர். இளையராஜாவின் தீவிர ரசிகர். சமீபமாக, அவருடைய புது ரெக்கார்டிங் ஸ்டூடியோவுக்கு சென்று, இளையராஜாவின் பாடல்களை இவர் பியானோவில் வாசித்த வீடியோவைக் காட்டி வாழ்த்து பெற்று வந்தார். எல்லா நகைச்சுவை நடிகர்களிடமும் நட்பு பாராட்டி வரும் விவேக், நல்ல நடிகர் மட்டுமல்ல நல்ல மனிதர் என்பதுதான் திரைத்துறையில் இருக்கும் பலரின் கருத்தாகவும் இருக்கிறது. இதுவரை, ஆறு முறை தமிழ்நாடு மாநில விருதுகளை பெற்றுள்ளார். 2009ஆம் ஆண்டு இந்திய அரசு பத்மஸ்ரீ விருது கொடுத்து கௌரவித்தது.

விவேகானந்தன் என்ற பெயரை சினிமாவுக்காக விவேக் என்று மாற்றினார். ஆனால், இவ்வளவு குறுகிய காலத்தில் அந்தப் பெயர் வரலாறாக மாறும் என யாரும் நினைக்கவில்லை. வியாழக்கிழமை வரை அதே சிரித்த முகத்தோடு இருந்தவர், இனி நம்மோடு இல்லை என்று நினைக்க நெஞ்சம் மறுக்கிறது. விவேக் இனி ஜனங்களோடு இல்லாமல் போனாலும் எப்போதும் அவர் ஜனங்களின் கலைஞன்தான். அவருடைய நகைச்சுவை காட்சிகளுக்கும் அதில் இருக்கும் கருத்துகளுக்கும் என்றும் அழிவில்லை.

## விவேக் மரணத்துக்கும் தடுப்பூசிக்கும் தொடர்பா?

### கடந்த வியாழக்கிழமை:

குடும்பத்தினருடன் வீட்டில் பேசிக் கொண்டிருக்கும்போது விவேக் மயங்கி விழுந்தார் என்றும், உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் எனவும், பரிசோதனை முடிவில் ஆஞ்சியோ சிகிச்சை அளிக்கப்பட்டது.

அவருக்கு ஏற்பட்ட மாரடைப்புக்கும் கொவிட் தடுப்பூசிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர்.

நடிகர் விவேக் இறப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் தாமாகவே சென்று தடுப்பூசி போட்டுக் கொண்டார். இது தொடர் பில் தமிழக சுகாதார துறை செயலர் மருத்துவர் ஜே. ராதா கிருஷ்ணன் கூறுகையில், "ஒரு வாரத்திற்கு முன்பே விவேக் தானாகவே தடுப்பூசி போட வருகிறேன் என்று கேட்டிருந்தார். அவர் போட்டுக்கொண்டால் அதனைப் பார்த்து பலர் தடுப்பூசி போடுவதற்கு முன்வருவார்கள் என்று கூறி அவரே நேற்றுமுன்தினம் வருகை தந்திருந்தார். மத்திய அரசின் தடுப்பூசி வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இதய கோளாறு, புற்றுநோய் போன்ற பல்வேறு நோய் உள்ளவர்கள் கட்டாயம் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், விவேக்கின் நிலைமை எங்களுக்கும் மிகப்பெரிய அதிர்ச்சியாகத்தான் உள்ளது. நேற்றுமுன்தினம் எங்களுடன் இருந்தவருக்கு, இன்றைய தினம் (நேற்று) இதுபோன்ற இதய கோளாறு ஏற்பட்டுள்ளது. எனினும், இதற்கும் நேற்றுமுன்தினம் தடுப்பூசி போட்ட தற்கும் எந்த தொடர்பும் இல்லை," என்று தெரிவித்தார்.

### தடுப்பூசி போட்டுக்கொண்ட மறுநாள்

முன்னதாக, கடந்த வியாழக்கிழமை சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள அரசு உயர் சிறப்பு மருத்துவமனையில் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டார் விவேக். கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்வது தொடர்பாக மக்களிடம் அச்சம் நிலவுவதாகவும், அந்த அச்சத்தைப் போக்கவே அரசு மருத்துவமனையில் தடுப்பூசி போட்டுக்கொண்டதாகவும் அவர் அப்போது ஊடகங்களிடம் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்



# இலங்கை – இந்திய புவிசார் அரசியலுக்குள் அகப்பட்டுள்ள

# வடக்கு மீனவர் பிரச்னை

இலங்கை - இந்திய உறவை தீர்மானிக்கும் பிரதான அம்சமாக அமைந்திருப்பது அமைவிடமாகும். இதனை இன்னும் இலகுவாகக் குறிப்பிடுவதானால் புவிசார் அரசியல் எனலாம். இரு நாட்டுக்குமான உறவை புவிசார் அரசியல் வரையறுக்க முயலுகிறது. அதாவது இலங்கை - இந்திய தரையமைப்பு மட்டுமல்ல கடல் பரப்பும் அது அமைந்திருக்கின்ற இந்து சமுத்திரமும் பிரதான இடம்பெறுகிறது. கடலால் பிரிக்கப்பட்டிருந்தாலும் இரு நாடுகளும் கலாசார, பண்பாட்டு தளத்தில் அதிக பிணைப்பினைக் கொண்டுள்ளன. அதனால் அரசியல் மற்றும் இராணுவ விடயங்களில் இந்தியாவும் இலங்கையும் பரஸ்பரம் ஒன்றிணைந்து செயல்படுவதையே இந்தியத் தரப்பு கருதுகிறது. அவ்வாறு இலங்கைத் தரப்பு விலகிய போதெல்லாம் அதிகமான நெருக்கடியை இலங்கை கடந்த காலத்தில் எதிர் கொண்டிருகிறது. சமகாலத்தில் அதற்கான வாய்ப்பு குறைவாகத் தெரிந்தாலும் மாலைதீவுடனான இந்தியாவின் நடவடிக்கைகள் இலங்கை விடயத்திலும் கவனிக்கப்பட வேண்டியுள்ளதாகவே தெரிகிறது. இக்கட்டுரையும் இலங்கை - இந்திய மீனவர் பிரச்னை சார்ந்த தேடலாக அமையவுள்ளது.

முதலில் இந்திய - இலங்கை கடல்பரப்பானது சர்வதேச விதிகளுக்கு அமைவானதாக வகைப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. அதாவது ஐக்கிய நாடுகள் சபையின் கடல் சட்டத்திற்கு அமைவாக (UNCLOS) செயல்படுவதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட இரு நாட்டு உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளன. (1974/1976/1977). குறிப்பாக 32 கி.மீ இடைவெளியால் பிரிக்கப்பட்டுள்ள இரு நாடுகளும் மன்னார் வளைகுடாவையும் பாக்கு நீரிணையையும் வங்காள விரிகுடாவையும் அடிப்படையாகக் கொண்டு புரிந்துணர்வை ஏற்படுத்தியுள்ளன.

இத்தகைய உடன்பாட்டின் அடிப்படையிலேயே இரு நாடுகளுக்குமான கடல் எல்லை வரையறுக்கப்பட் டுள்ளது. ஆனால், இத்தகைய நடைமுறைகளை எல்லாம் கருத்தில் கொள் ளும் போது குழப்பமான விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டிய நிலையேற்பட்டுள்ளளது. குறிப்பாக இந்திய மீனவர்களின் அத்துமீறல் நிகழ்கின்றன என்றும் இலங்கையின் வடக்கு கடல் பரப்பிலேயே அதிக மீன்பிடி அத்துமீறல்கள் நிகழ்கின்றன எனவும் மீனவ தொழில் சங்கங்கள் குற்றம்சாட்டு கின்றன. இத்தகைய குற்றச்சாட்டுகளை ஆதாரப்படுத்தும் தகவல்கள் அதிகமாக வெளிவருகின்றன. அதில் மிக வலுவான தகவலாக செய்மதி மூலமான வீடியோக்களும் படங்களும் நிலைமையை தெளிவுபடுத்துகின்றன. அதாவது, இரவு 1 மணிக்கு பின்பு வடக்கின் கடல் பகு தியை நோக்கி நகரும் மீன்படி ட்ரோலர்கள் அதிகாலை 4 மணியளவில் இப்பிரதேசத்தை விட்டு கடந்து செல்கின்றன என்பதாகும்.

இத்தகைய மீன்பிடி ட்ரோலர்கள் எவையும் உடன்பாட்டின் எல்லையையோ, கட்டுப்பாட்டு பகுதியையோ பின்பற்றுவதில்லை. வடக்கின் கடல் பகுதி முழுவதும் 1-4 மணிவரையும் ட்ரோலர்கள் நடமாடுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதனால் பாரிய இழப்புகள் வடக்கு மீனவர்களுக்கும் கடல் பகுதிக்கும் ஏற்படுவதென்பது யாருமே அறிந்த விடயம். அதனைக் கடந்து இந்த விடயத்தில் தெளிவான அரசி யல் நிலவுவதைக் காணமுடிகிறது.

ஒன்று வடக்கு மீனவர்கள் மிக நீண்ட காலமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை கவனத்தில் கொள்வதை விடுத்து, அவர்களை அரசியல் ரீதியில் கையாள அரசியல் தலைமைகள் முயல்கின்றன. இதனால் மீனவ தொழில் சங்கங்கள் இந்திய மீனவர்களின் நடவடிக்கைக்கு எதிராக பாரிய பேராட்டங்களை மேற்கொண்டு எதிர்ப்பு வாதத்தை ஏற்படுத்துகின்றன. இத்தகை அரசியலில் இரு பிரதான நன்மைகள் அரசியல் தலைமைகளுக்கு உண்டு அதாவது உள்நாட்டில் வாக்குகளை திரட்டுவதுடன் இந்திய எதிர்ப்பு வாதத்தை ஏற்படுத்தி முற்றாகவே பகைப் புலமுடையவர்களாக இரு தரப்பினரையும் உருவாக்குவதாகவுள்ளது. அதாவது, வடக்கு தமிழ் மீனவர்களையும் தமிழக மீனவர்களையும் முரண்பாடுடையவர்களாக மாற்றுவதில் உள்ள அரசியலை பயன்படுத்திக் கொள்ள அதிக முனைப்புக்கள் காணப்படுகின்றன. இது தனித்து தமிழக வடக்கு மீனவர் விடயமாக மட்டும் அமையாது. அது இந்திய அளவில் பிரதிபலிக்கக் கூடிய விடயமாகவும் அமைந்துள்ளது. தமிழருக்கும் இந்தியாவுக்குமான உறவையும் இதில் கருத்தில் கொள்வது அவசியமானது. அது ஏற்கனவே, சிதைந்து போயுள்ளது அதனை மேலும் சிதைக்க முயல்வது ஆபத்தான அரசியல் எதிர்காலத்தை ஏற்படுத்தக் கூடியது. அதனைத் தவிர்ப்பது அவசியமானது.

இரண்டு இந்திய மீனவர்களுக்கும் தமிழருக்குமான முரண்பாடு என்ற கோணத்தில் இந்த விடயத்தை அணுகுவதையே அவதானிக்க முடிகிறது. இலங்கையின் இறைமை என்பது தென் இலங்கை மீறப்படுவது மட்டுமல்ல. வடக்கும் - கிழக்கும் இலங்கையின் இறைமைக்கு உட்பட்டதே. வடக்கு - கிழக்கில் அல்லது வடக்கில் மீறப்படுவதென்பதும் இலங்கையின் இறைமை மீறப்படுவதாகவே கருதப்பட வேண்டும். ஏனைய பிரதேசங்களில் காட்டப்படும் அக்கறை வடக்கில் காட்டப்படாதது மட்டுமல்ல ஏனைய விடயங்களில் வடக்கின் மீது செலுத்தப்படும் கவனம் மீனவர் விடயத்திலும் காட்டப்படாதது பற்றிய கேள்விகள் தவிர்க்க முடியாததே.

வடக்கின் மீது எந்த அரசும் எதனை மேற்கொண்டாலும் வளங்கள் சுரண்டப்பட்டாலும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டாலும் அது இறைமையாகக் கொள்ளபட முடியாததா என்ற கேள்வி நியாயமானதாகவே எழும். இத்தகைய எல்லையற்ற வளச்சுரண்டல் வடக்கை மட்டுமல்ல இலங்கையையும் பாதிப்பதுடன் முழுப்பிராந்தியத்தையும் பாதிப்புக்குள்ளாக்கும் என்பதை அரசியல் தலைமைகள் உணர வேண்டும். இந்தியாவுடனான மீனவர் பிரச்னையை அரசுகள் சுமூகமாகத் தீர்த்துக் கொள்ளலாம். அதற்கான சட்ட உடன்படிக்கைகளும் எல்லையில் நிறுத்த கடற்பலமும் இறைமை படைத்த அரசிடம் உண்டு. ஆனால், அதனை மேற்கொள்ள தவறுவதற்கான காரணம் புவிசார் அரசியல் மட்டுமன்றி வடக்கின் மீதான அணுகுமுறையுமாக அமைய வாய்ப்புள்ளது. இவ்வகை வாய்ப்புக்கள் இருக்கும் போது இந்திய மீனவர்களை கைது செய்வது மீள விடுவிப்பது ஓர் அரசியல் ஆக்கியுள்ளமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

மூன்றாவது இந்தியாவின் நலனுக்கு எதிராக வட இலங்கை வேறு அரசுகளால் பயன்படுத்தப்படுவதனை இந்தியா அனுமதிப்பது கடினமானதே. காரணம் இந்திய நலன்களுக்குள் இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விட வடக்கு நேரடியாக செல்வாக்குச் செலுத்துகிறது. அதிலும் வட பகுதியின் கடல் பிராந்தியம் மற்றும் தீவுகள் இந்தியக் கரையோரத்திலிருந்து 32 கி.மீ தூரத்திலேயே அமைந்துள்ளன. சீனாவின் செல்வாக்கு தீவுகளை நோக்கி நகர இந்தியாவும் தீவுகளை தனது செல்வாக்குக்குள் கொண்டுவர அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள முனையும். கச்சதீவு தொடர்பில் தமிழ் நாட்டு அரசியல் தலைவர்கள் கூறும் அரசியலைவிட மத்திய அரசு எடுக்கும் முடிவுகளே முக்கியமானது. இந்திய மத்திய அரசு தமிழ்நாட்டின் நலன் என்பதை விட இந்திய தேசிய நலனுக்குள்ளேயே கச்சதீவைப் பற்றிய முடிவுகளை மேற்கொள்ளும். தமிழகத்தில் பா.ஜக. அ.தி.மு..க. கூட்டணியின் வெற்றி வாய்ப்பு தமிழகத் தேர்தலில் சாத்தியமாகுமானால் கச்சதீவு மத்திய மாநில அரசுகளின் கூட்டு நகர்வாக அமைய வாய்ப்புளளது. அப்போது மத்தியினதும் மாநிலத்தினதும் நலன்கள் ஓரிடத்தில் சந்திக்கும் நிலை ஏற்படும். எது எவ்வாறு அமைந்தாலும் இப்பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கே அதிக மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

நான்காவது கச்சதீவு மற்றும் மீனவர் பிரச்னை என்பனவற்றுடன் 13ஆவது திருத்த சட்டமும் நிலையான அரசியலை இந்தியாவுக்கு ஏற்படுத்தக் கூடியது. அதனால், அதன் தொடர்ச்சியை பேணுவதும் நிலையானதாக மாற்றுவதும் இந்தியாவுக்கு அவசியமானது. இவற்றின் மூலமே இந்தியாவின் செல்வாக்கு மட்டுமல்ல நலன்களும் பாதுகாக்கப்படும். அதனால், இலங்கை தனது புவிசார் நண்பர்களுடன் வைத்துக் கொள்ளும் நட்புறவில் இந்தியா முதன்மை என்பதை கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமானதாக உள்ளது. வெறும் வார்த்தைகளால் மட்டுமல்ல நடைமுறையிலும் அதனைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. அதனைக் கருத்தில் கொள்ள தவறும் போதெல்லாம் இலங்கை-இந்திய நட்புறவில் நெருக்கடி ஏற்ப்படுவது அவதானிக்க முடிகிறது.

ஐந்தாவது இது மீனவர் பிரச்னையாக மட்டும் கருத முடியாது. அதனுடன் கடத்தல் மிகப்பிரதான விடயமாக மாறியுள்ளது. அதில் போதைப் பொருள் முதன்மையானதாக உள்ளதுடன் கடந்த காலத்தில் ஏற்பட்டிருந்த தீவிரவாத மற்றும் ஆயுதக் கடத்தலும் நிகழ வாய்ப்புள்ளது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பிலும் அத்தகைய உரையாடல் ஒன்று ஆரம்பத்தில் முதன்மைப்படுத்தி செய்திகள் வெளியாகியிருந்தன. இலங்கை முழுவதிலும் போதைப் பொருள் தடுப்பது மிகப் பெரும் சவாலாகியுள்ளது. அத்தகைய போதைப் பொருள் கடத்தலுக்கு கடல்பகுதி முக்கிய பிரதேசமாக உள்ளது. அதிலும் வடபகுதிக் கடல்பகுதி அதிக பரிமாற்றம் நிகழும் கடல் பகுதியாக தெரிகிறது. ஆரம்பத்தில் வடக்கை பாதித்த போதைப் பொருள் பாவனை தற்போது தெற்கையும் மோசமாகப் பாதித்து வருகிறது.

எனவே வடக்கு மீனவர் பிரச்னைக்கான தீர்வு அரசியலாக்கப்படுவதை விடுத்து வளப்பகிர்வுடனும் வாழ்வாதாரத்துடனும் இணைக்கப்பட வேண்டும். ஆட்சிக்கு வரும் அரசாங்கங்களும் எதிர்தரப்பினரும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏறக்குறைய அனைத்துப் பிரச்னைகளையும் அரசியலாக்குகின்றனரே அன்றி அதற்கான அடிப்படைக்கு தீர்வை நோக்க தவறுகின்றனர். அவ்வாறு அரசியலாக்கப்படுவதும் தமது நலனுக்கானதாகவே தெரிகிறது. தமது வாக்கினையும் கட்சியின் வாக்கினையும் மட்டுமே இலக்காகக் கொள்கின்றனரேயன்றி மக்களின் அரசியல், சமூக, பொருளாதார விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக தெரியவில்லை.

இதுவே, இலங்கையின் கடல்பரப்பிலும் நிகழ்கிறது. இரு நாட்டுக்குமான புவிசார் அரசியல் நகர்வில் மீனவர் பிரச்னை மட்டுமல்ல அனைத்து பிணக்குகளும் அரசியலாகின்றதே அன்றி தீர்வாக எதுவும் எட்டப்பட முடியாத நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. அரசியல் அனைத்திலும் பிரதிபலிக்கப்படுவதாக உள்ளது தவிர்க்க முடியாதது. அதுவே உலகத்தை தலைமை தாங்குகிறது. ஆனால், அதன் உண்மைத் தன்மை அதன் ஆரோக்கியத்தில் தங்கியுள்ளதே அன்றி பலவீனத்தில் அல்ல.

பலவீனத்திற்காக பயன்படுத்தப்படுவது எதுவும் அரசியலாகாது. அதனை அரசறிவியலாகக் கொள்ளவும் முடியாது.

- நன்றி: அருவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

44

2009 25

25. 200 இன் அரைவாசியின்1.·. 4 உடன் 5 ஐக் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது?

1.25 2. 30 3. 35

200 இனது அரவாசி 100 ஆகும். இதன. கால.வாசி 25ஆகும்.இதனுடன் 5 இனைக் கூட்டும்போது 30 வரும்


எனவே சரியான விடை 2

2009 26

26.41 தொடக்கம் 45 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 4 எழுதப்படும் தடவைகள

41 42 43 44 45 = 4

எனவே சரியான விடை 1



அரைப்பங்கு நீளம் 1m 1m 1m 1m

=4m X 2=8m

நாடா அரைப்பங்காக மடிக்கப்பட்டு நான்கு சம நீளத்துண்டுகளாக்கப்பட்டது.

எனவே சரியான விடை 1

2011- 22

22. பிழையான கோவையைத் தெரிவுசெய்க.
(1) 6x6- 6 = 30 (2) 5 x 5 + 5 = 30 (3) 33 - 33 - 3 = 30

6X6=36-6=30 5X=25+5=30 தவறு

எனவே சரியான விடை - 3

2012- 23


23. சரியான கோவையைத் தெரிவு செய்க.
(1) 888 + 88 + 88 + 8 + 8 = 1000
(2) 888 + 88 + 8 + 8 + 8 = 1000
(3) 888 + 88 + 88 + 8 + 8 + 8 = 1000

3X8=24+88=112 + 888 =1000

எனவே சரியான விடை 2

35. இவ்விரு பாத்திரங்களையும் மாத்திரம் பயன்படுத்தி 4லீற்றர் நீரைச் சரியாக அளக்க முடியுமா?

எனவே 4லீற்றரை அளப்பதற்கு 3 லீற்றரில் பாத்தரத்திலும் 1 லீற்றரை 5 லீற்றர்
பாத்திரத்திலும் அளக்க முடியும்.




எனவே சரியான விடை 1

2015 22

22. ஒரு சைக்கிளை வாங்குவதற்கு ரூ. 8500 தேவைப்பட்டது. என்னிடம் ரூ. 4800 இருந்தது. மீதியை இரு நண்பர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன். பெற்றுக் கொண்ட பணம்

4800+2400+1300=8500 எனவே சரியான விடை 1


2015 - 28

28. 100 தொடக்கம் 110 வரையுள்ள எண்களை எழுதும் போது "0" எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை

100 101 102 103 104 105 106 107 108 109 110
== = = = = = = = = = =
1 2 3 4 5 6 7 8 9 10 11 12

எனவே சரியான விடை 3

06. ஓர் உணவுப் பொருள் சுற்றப்பட்டுள்ள பொதிதாளில் உள்ள கூட்டுத் துண்டின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.
கூட்டுத்துண்டுக்கு ஏற்க 1. 2 ஆகியனவராக இருக்கத்தக்க முறையே யாவை?




3. உற்பத்தி செய்த திகதியும் காலாவதியாகும் திகதியும்

எனவே சரியான விடை 3

10. " திடசங்கற்பம்" என்னும் சொல்லில் உள்ள சில எழுத்துக்களைக் கொண்டு ஆக்கத்தக்க கருத்துள்ள சொல்.

திடசங்கற்ப ம் கபடம் எனவே சரியான விடை 1

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# ஜனாதிபதியால் அச்சுறுத்தப்பட்ட முதல் நபர் விஜயதாஸ அல்லர்!

*சாதாரண பொதுமக்களின் நிலை குறித்து அநுரகுமார கவலை*



**கொழும்பு,ஏப்.18**

**கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் விஜயதாஸ ராஜபக்ஷ மட்டும் அச்சுறுத்தப்படவில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார். அதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரையே ஜனாதிபதி அச்சுறுத்தும்போது சாதாரண பொதுமக்களின் நிலை என்ன என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.**

எனவே, மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல்களால் நாட்டை ஆட்சி செய்ய ஜனாதிபதியும், அரசாங்கமும் மேற்கொண்ட முயற்சிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் என்றும் அநுரகுமார குறிப்பிட்டார்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்து தொடர்பில் தனது கருத்தை தெரிவிக்க ஜனாதிபதிக்கு உரிமை உண்டு. ஆனால், ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அல்லது சாதாரண மக்களின் கருத்துக்குப் பதிலளிக்க பல்வேறு வழிகள் உள்ளன.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு அல்லது அரசாங்கத் தகவல் திணைக்களம் ஊடாக அந்த அறிக்கைக்கு பதிலளித்திருக்க முடியும். அதனைவிடுத்து நேரடியாக அச்சுறுத்த முடியாது- என்றார். (எ)

# இந்திய இராணுவத்தால் பயன்படுத்தப்படும் இரு கைக்குண்டுகள் வவுனியாவில் மீட்பு

*வவுனியா,ஏப்.18*

இந்திய இராணுவத்தால் பயன்படுத்தப்படுவதாக கருதப்படும் இரு கைக்குண்டுகள் செயலிழந்த நிலையில் வவுனியாவில் மீட்கப்பட்டன.

வவுனியா, ஈரப்பெரியகுளம், நவகமுவ பகுதியில் குறித்த இரு கைக்குண்டுகளும் நேற்று முன்தினம் மாலை கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தப் பகுதியிலுள்ள வெற்றுக்காணி ஒன்றில் மழை காரணமாக மண் அரித்துச் செல்லப்பட்ட இடத்தில் சந்தேகத்துக்கிடமான பொருள்கள் காணப்பட்டதையடுத்து ஈரப்பெரியகுளம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் அந்தப் பொருள்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டனர். இந்நிலையில் இந்த இரு கைக்குண்டுகளும் இந்திய இராணுவத்தால் பயன்படுத்தப்படுகின்ற மில்ஸ் 36 வகையைச் சேர்ந்த கைக்குண்டுகள் எனவும், அவை செயலிழந்து காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.

குறித்த இரு கைக்குண்டுகளையும் விஷேட அதிரடிப்படையினரின் உதவியுடன் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், இந்தப் பகுதியில் மேலும் வெடிபொருள்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் நீதிமன்ற உத்தரவைப் பெற்று அப்பகுதியில் நிலத்தை அகழ்ந்து தேடுதல் மேற்கொள்ளவும் பொலிஸாரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

# 4 நாள்களில் 13 கோடியே 50 இலட்சம் ரூபாய் அதிவேக நெடுஞ்சாலை மூலம் வருமானம்

*கொழும்பு,ஏப்.18*

புத்தாண்டு காலப்பகுதியான கடந்த நான்கு தினங்களில் அதிவேக நெடுஞ்சாலைகளில் 13 கோடி 50 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான வருமானம் கிடைத்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் 5 இலட்சத்து 15 ஆயிரத்துக்கும் அதிகமான வாகனங்கள் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்துள்ளன. எதிர்வரும் சில தினங்களிலும் அதிகளவு வருமானம் கிடைக்கும் என்று அதிவேக நெடுஞ்சாலை வழிநடத்தல் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடத்தில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் அதிகளவான வாகனங்கள் பயணித்திருக்கின்றன. (எ)



# ஹற்றனில் மூவின மக்களும் பங்கேற்ற தலைக்கு எண்ணெய் தேய்க்கும் நிகழ்வு

*ஹற்றன்,ஏப்.18*

தமிழ், சிங்கள புத்தாண்டில் தலைக்கு எண்ணெய் தேய்க்கும் மலையகத்தின் பிரதான நிகழ்வு, ஹற்றன் நீக்ரோதாரம விகாரையில் நேற்றுக் காலை 07.16 மணிக்கு விகாரையின் பிரதான தேரர் மாகம விமல தேரர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த எண்ணெய் தேய்க்கும் நிகழ்வில் தமிழ், சிங்கள, முஸ்லிம் இனத்தவர்கள் கலந்து கொண்டமை விஷேட அம்சமாகும். மேலும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பயங்கரவாத தடை விதிமுறைகள் மனிதவுரிமை மீறல்களுக்கு வழிவகுக்கும்

## சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு,ஏப்.18

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் வெளியிடப்பட்டிருக்கும் பயங்கரவாத தடை தொடர்பான விதிமுறைகள் ஏற்கனவே மிகவும் ஆழமான குறைபாடுகளைக் கொண்டிருந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் மேலும் வன்முறைகளும், மனித உரிமைகள் மீறல்களும் இடம்பெறுவதற்கு வழிவகுக்கும் என்று சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.**

இதுகுறித்து சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

பயங்கரவாத தடை தொடர்பான விதிமுறைகள் குறித்த வர்த்தமானி அறிவித்தல் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது. இதில்11 அமைப்புக்கள்தீவிரவாத அமைப்புக்களாக இனங்காணப்பட்டிருக்கின்றன.அத்துடன்இதுபோன்ற அமைப்புக்களுடன்தொடர்புகளைப் பேணுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு மாறாக செயல்படுபவர்களை 20 வருடங்களுக்கும் அதிகமான காலம் சிறைப்படுத்தவும், அத்தகைய செயல்பாடுகள் அல்லது அவற்றை முன்னெடுப்போருடன் தொடர்புகளைப் பேணியவர்களை 10 வருடங்களுக்கும் அதிகமான காலம் சிறைப்படுத்தவும் முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுதல்என்ற பெயரில் மோசமான விதிமுறைகளை நடைமுறைப்படுத்துகின்ற இலங்கையின் நிறைவேற்று அதிகாரப்போக்கின் தன்மையே தற்போதும் பின்பற்றப்பட்டுள்ளது.

எவ்வித விசாரணைகளுமின்றி ஒருவரை இருவருடகாலம் வரை தடுத்துவைப்பதற்கு அனுமதியளிக்கும் தீவிரமயமாக்கலை ஒழித்தல் தொடர்பான விதிமுறைகள் வெளியிடப்பட்டு ஒரு மாதகாலத்தின் பின்னர் இந்த விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

தன்னிச்சையான கைது நடவடிக்கைகள் தொடர்பான அடிப்படைத் தராதரங்களை மீறுவதற்கான நியாயமாக தேசிய பாதுகாப்பு என்ற விடயத்தைக் குறிப்பிடுவது ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாகும் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(எ)



### புத்தாண்டை முன்னிட்டு

# தலைக்கு எண்ணெய் வைக்கும் நிகழ்வில் பங்கேற்றார் பிரதமர்

கொழும்பு,ஏப்.18

புத்தாண்டை முன்னிட்டு தலைக்கு எண்ணெய் வைக்கும் தேசிய நிகழ்வு பிரதமர் மஹிந்த தலைமையில் சுபநேரத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வு பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

காலை 7.16 மணிக்கு தெற்கு திசை நோக்கி நீல நிற ஆடை அணிந்து தலைக்கு ஆலம் இலை வைத்து ஆலம் சாறு மற்றும் எண்ணெய் வைத்து குளிப்பது இம்முறை புத்தாண்டு சடங்காகும்.

முதலில் புத்த மந்திரயவில் பூஜை வழிபாட்டில் ஈடுபட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அதனைத் தொடர்ந்து தலைக்கு எண்ணெய் வைக்கும் நிகழ்வில் ஈடுபட்டார்.

வரலாற்று சிறப்புமிக்க மாதன்வல ரஜமஹா விகாராதிபதி வணக்கத்திற்குரிய வெல்லகிரிய சுமங்கல தேரர் பிரதமருக்கு தலைக்கு எண்ணெய் தேய்த்து ஆசீர்வதித்தார்.

இந்நிகழ்வில் பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (எ)

# பேனா மூலம் இயற்கையைப் பாதுகாக்கும் திட்டம் இலங்கையை சேர்ந்த தந்தை, மகள் கண்டுபிடிப்பு

கொழும்பு,ஏப்.18

பேனாவின்மூலம்இயற்கையைப் பாதுகாக்கும் திட்டமொன்றை இலங்கையைச் சேர்ந்த தந்தையும் மகளும் கண்டுபிடித்துள்ளனர்.




பிளாஸ்ரிக் உள்ளிட்ட இயற்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பொருள்களால் இத்தனை காலமும் பேனா தயாரிக்கப்பட்டு வந்துள்ளது.

இலங்கையிலுள்ளபாடசாலை மாணவர்களால் மட்டும் நாளொன்றுக்கு 80 கிலோ கிராம் அளவுக்கு பேனாக்கள் வீசப்பட்டு வருவதாக கடந்த காலங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தச் செய்தியை அவதானித்த கண்டி பகுதியைச் சேர்ந்த சச்சினி கிறிஸ்டினா சுகிர்தன், இதற்கான மாற்றுத் திட்டத்தை சிந்தித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தான், தனது தந்தையான சுகிர்தனுடனும் கலந்துரையாடியுள்ளதாக கிறிஸ்டினா தெரிவித்தார்.

இலங்கையில் கொரோனா தொற்றின் முதலாவது அலை ஏற்பட்டிருந்த 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையிலான முடக்க நிலையின் போதே, இந்த திட்டத்தை நான் சிந்திக்கத் தொடங்கினேன். இயற்கைக்கு பாதிப்பு இல்லாத பேனா ஒன்றைத் தயாரிக்க முடிவெடுத்தேன் என்று அவர் கூறினார்.

தன்னால் தயாரிக்கப்பட்டுள்ள பேனா, பயன்படுத்தப்பட்ட பின்னர், வெளியில் வீசப்படும் பட்சத்தில், அதில் இருந்து மரங்கள் வளரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

முதற்கட்டமாக தயாரிக்கப்பட்டுள்ள பேனாவில், சிறிய வகையிலான செடிகள் மாத்திரமே வளரும் என பேனாவை தயாரித்த கிறிஸ்டினா கூறினார்.

பேனாவின் அளவு சிறியதாக உள்ளதால், சிறிய விதைகளை மாத்திரமே பேனாவில் உள்ளடக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும்காலங்களில்பெரிய மரக்கன்றுகள் வளரும் வகையில், இந்த பேனாவை தயாரிக்க தானும், தனது தந்தையும் எதிர்பார்த்துள்ளதாக கிறிஸ்டினா நம்பிக்கை தெரிவித்தார்.

தன்னால் தயாரிக்கப்பட்டுள்ள பேனா, 96 சதவீதம் இயற்கையுடன் ஒன்றிணைந்து செல்லும் என்றும் முதல் கட்டமாக, பேனாவில் மரக்கறி கன்றுகள், பூக்கன்றுகள் மற்றும் ஆயுர்வேத செடிகள் போன்ற விதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

இந்த பேனாவின் பின்புறத்தில் மரக்கறி, பூக்கன்று மற்றும் ஆயர்வேத செடிகளின் விதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், பேனாவின் பின்புறத்தில் இருந்தே, இந்த செடி துளிர்விட ஆரம்பிக்கின்றன.

இந்த பேனாவை, பின்புறமாக, மண்ணில் நடவேண்டும் என அவர் குறிப்பிட்டார். மேலும், இந்த பேனா, பயன்பாட்டிற்குப் பின்னர், மண்ணில் நடப்பட்டு ஒன்று முதல் இரண்டு வாரங்களில் கன்று வளரும் என அவர் தெரிவித்தார்.

இந்த பேனாவில் உள்ளடக்கப்பட்டுள்ள விதைகள் அனைத்தும், உரிய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பிறகே, பேனாவுக்குள் அடைக்கப்படுகின்றன எனவும் அவர்குறிப்பிட்டார். (எ)

# மாற்று சமூகத்தால் துண்டாடப்படுவோம்

## கலையரசன் எச்சரிக்கை

அம்பாறை,ஏப்.18

தமிழ் இனம் சார்ந்த அரசியலை உருவாக்காவிட்டால் மாற்றுச் சமூகத்தால் துண்டாடப்படுவோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை காரைதீவில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

தமிழ்த் தேசியம் என்று சொல்லப்படுகின்ற தூய்மையான அரசியலை முன்னெடுக்கின்ற அரசியல்வாதிகளால் மாத்திரமே எமது மக்களின் பிரச்சனை குறித்தான விடயங்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

நாங்கள் யாருக்கும் சோரம் போய் சமூகத்தை விற்றுப் பிழைப்பதற்குத் தயாரில்லை. எமது பிரதேசங்களின் அனைத்து விடயங்களையும் அறிந்தவர்களாகவே நாங்கள் செயல்படுகின்றோம்.

எமது சமூகம் ஏமாற்றப்படும் சமூகமாக இருந்துவிடக்கூடாது. எமது ஒவ்வொரு பிரதேசங்களிலும் தலைவர்கள் உருவாக்கப்பட வேண்டும். உள்ளூர் அரசியலில் மிகவும் சிறப்பாகச் செயல்படக் கூடியவர்களை நாங்கள் இனங்காண வேண்டும்.

எதிர்வருகின்ற ஒவ்வொரு தேர்தல்களிலும் எமது இனம் சார்ந்த அரசியலை எமது உறவுகள் மத்தியில் நாங்கள் உருவாக்காவிட்டால் மாற்றுச் சமூகம் எங்களைக் கூறுபோட்டுத் துண்டாடி, எம்மை ஆக்கிரமிக்கக் கூடிய ஒரு நிலைமையே ஏற்படும்.

அபிவிருத்திக் குழுக் கூட்டங்களின்போது எமது பிரதேசங்கள் எவ்வாறு பார்க்கப்படுகின்றது என்பதை பலரும் அறிந்திருப்பார்கள். எனவே, தொடர்ந்து ஏமாற்றுகின்ற விடயங்களுக்கு எமது மக்கள் இடங்கொடுக்கக் கூடாது. எம்மை நாமே ஆளக் கூடிய, எம்மை எமது மக்களே தெரிவு செய்யக் கூடிய நல்ல தொரு எதிர்காலத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் திட்டங்களைத் தயார்ப்படுத்தி எமது மக்களை வளப்படுத்தக்கூடிய விதத்தில் நாங்கள் செயல்படுவோம்- என்றார். (எ)

### வீதி விபத்துக்களில் சிக்கி

# 72 மணித்தியாலங்களில் 40 பேர் பரிதாப மரணம்!

கொழும்பு,ஏப்.18



நேற்றுக்காலை 6 மணியுடன் நிறை வடைந்த கடந்த 72 மணித்தியாலங்களில் வாகன விபத்துக்களில் சிக்கிய 40 பேர் உயிரிழந்தனர் என்றும், நேற்று முன்தினம் மாத்திரம் வாகன விபத்துக்களில் 10 பேர் உயிரிழந்தனர் என்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கடந்த 14 ஆம் திகதி வாகன விபத்துக்களால் 14 இறப்புக்களும், 15 ஆம் திகதி 16 இறப்புக்களும் பதிவாகின என்றும் அவர் கூறினார்.

கவனவீனத்துடன் வாகனம் செலுத்தியதால் இந்த மரணங்கள் நிகழ்ந்துள்ளன என்றும் போக்குவரத்து விதிகளை மீறுபவர்கள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பை பாதுகாப்பதற்கு சுமந்திரனை வெளியேற்றுங்கள்

## கே.வி.தவராசா சம்பந்தனுக்கு கடிதம்

"கட்சிக்கு எவரும் வாக்களிக்க வில்லையெனவும் கட்சி வாக்கால்தான் வெற்றி பெறவில்லையென வும் தனது தனிப்பட்ட வாக்குகளினா லயே வெற்றி பெற்றதாகவும் ஆபிரஹாம் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளமை கட்சியின் மீதான மக்களின் நம்பிக்கையையும் அங்கீகாரத்தையும் தரந்தாழ்த்திக் கேவலப் படுத்தும் - அகங்காரம்மிக்க போக்கா கும். இத்தகைய பொறுப்பற்ற நபர் தொடர்ந்தும் கட்சியில் இருப்பது குறித்து மீள் பரிசீலனை செய்ய வேண்டும்" என தமிழரசுக்கட்சி கொழும்புக் கிளைத் தலைவர் ஜனாதிபதி சட்டத் தரணி கே.வி.தவராசா கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் கோரியுள் ளார்.

இது குறித்து அவர் சம்பந்தனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் அந்தக் கடிதத்தின் முழு விவரம் வருமாறு:

கட்சியில் நான் இணைக்கப்பட்ட நாளிலிருந்து கடந்த ஒரு தசாப்தத்துக் கும் மேலாக இன்றுவரை தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் தலைவரான உங்களிடம் ஒருபோதும் எனக்காக தலை வர் என்ற வகையில் எந்தவிதமான வேண்டுகோள்களையும் முன்வைத்த வனல்லன், முன்வைக்கப்போகின்றவனு மல்லன். ஆனால், தமிழ்த் தேசியத்தின் வலிமையான இருப்பின் அவசியத்தைக் கருத்திற்கொண்டு கீழ் காணும் வேண்டு கோள்களை முதலாவதும் இறுதியுமான வேண்டுகோள்களாக முன்வைக்கின் றேன்.

எனது வேண்டுகோள்களை கருதில் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் என்ற வகையில் தீர்க்க மான முடிவை எடுக்காவிடின் தமிழ்த் தேசியத்தினதும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினதும் எதிர்காலம் கேள்விக் குறியாகும். தங்களின் தலைமைத்துவக் காலத்தில் தமிழரின் அரசியல் வல்லமை சிதைக்கப்பட்டது என்ற அவப்பெயரைச் சம்பாதித்து தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற வார்த்தைகளை மொழியும் இக்கட்டான தருணத்துக்கு தாங்கள் வந்துவிடக்கூடாது

**தமிழ் தேசிய கூட்டமைப்பின் எதிர்காலம்?**

(1) கட்சிக்கு எவரும் வாக்களிக்க வில்லையெனவும் கட்சி வாக்கால்தான் வெற்றி பெறவில்லையெனவும் தனது தனிப்பட்ட வாக்குகளினாலயே வெற்றி பெற்றதாகவும் ஆபிரஹாம் சுமந்திரன் குறிப்பிட்டுள்ளமை கட்சியின் மீதான மக்களின் நம்பிக்கையையும் அங்கீகாரத் தையும் தரந்தாழ்த்திக் கேவலப்படுத்தும் அகங்காரம் மிக்க போக்காகும். இத்தகைய பொறுப்பற்ற நபர் தொடர்ந்தும் கட்சியில் இருப்பது குறித்து மீள் பரிசீலனை செய்ய வேண்டும்.

(2)பஸில் ராஜபக்ஷவுக்கு ஆதர வளிப்பதான தொனியில் கருத்து வெளி யிட்டமை தொடக்கம் தமிழர்களுக்கு எதிராக இனவழிப்பு நடைபெறவில்லை.

(3)கட்சியின் பேச்சாளர் நியமிக்கப் படாத நிலையில் இத்தகு கருத்துகள் கட்சியைப் பாதிப்படையச் செய்வது குறித்து, பாராளுமன்ற உறுப்பினர் ஆபிரஹாம் சுமந்திரன் பிரக்ஞையற்றுச் செயல்படுதலானது எவ்வகையிலும் தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஆரோக்கிய மானதல்ல என்பது மட்டுமின்றி தமிழ் இனம் இந்த நாட்டில் இருந்தது என்பதற்கே அடையாளம் இல்லாமல் செய்யும் செயல்பாடாகும்.

தமிழ் மக்களின் அதிகப் பெரும் பான்மை ஆணையைப் பெற்றுத் தமிழர் களின் தலைமைத்துவத்தைச் சுமந்து திறம்பட வழிநடத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் ஆணையை இழந்துகொண்டு செல்கின்ற இச்சூழ்நிலையில் அதற்கான காரணங்கள் பற்றிய ஆய்வு மிகவும் முக்கியமானது. மனந்திறந்த வெளிப் படையான கருத்தாடல் முறைமை செவ்வையான வழியாகத் தோன்று கின்றது. கட்சியின் பொறுப்பு வாய்ந்த அனைத்து நிர்வாகிகளும் கட்சியைப் பலப்படுத்தி மீளவும் அரசியல் ரீதியில் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழர்களின் ஏக குரலாக ஒலிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயல்படத் தயாராக இருக்கவேண்டிய காலத்தில் நாம் இருக்கின்றோம்.

கடந்த பாராளுமன்றத் தேர்தல் இடம்பெற்ற பின்னர் இன்னும் சரியான முறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பதவி நிலைகள் உரியவர்களுக்கு அளிக்கப்படாத இடைவெளியில் கட்சி யின் இருப்பைச் சிதைக்கும் பல்வேறு கருத்தாடல்கள் தொடர்ந்தும் ஊடகங் களில் பேசுபொருளாக இருப்பதை அவதானிக்கின்றோம். அந்த வகையில் மிகவும் வெளிப்படையாகப் பேசுவது தான் இவ்விடத்தில் எமது கட்சியின் இருப்புக்கும் எதிர்காலத்துக்கும் சிறந்தது என்ற அடிப்படையில் முக்கியமான சில விடயங்களைத் தங்களின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

இன்னும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு ஓர் ஊடகப் பேச்சாளர் நியமிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ஆபிரஹாம் சுமந்திரன் தன்னைக் கட்சி யின் ஊடகப் பேச்சாளர் போன்று பிரதிபலித்தபடி தொடர்ந்தும் சர்ச்சை யான கருத்துக்களை பொதுவெளியில் தெரிவித்து வருவதாவது கட்சியில் அரசியல் இருப்புக்கும் உறுதிப்பாட்டுக் கும் சவலாக அமைந்துள்ளது. பஸில் ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பதான தொனியில் கருத்து வெளியிட்டமை தொடக்கம் இப்போது கடைசி யுத்தத்தில் இனவழிப்பு நடைபெற வில்லை என்பது வரையான பொது வெளிக் கருத்துகள் சுமந்திரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் என்ற கோதாவிலேயே தொடர்ச்சியாகப் பரப்புரை செய்யப் பட்டு வந்த நிலையில் 2021ஆம்ஆண்டு சித்திரை மாதம் 11ஆம் திகதி கெப்பிட் டல் (Capital) தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் கட்சிக்கு எவரும் வாக்களிக்கவில்லையெனவும் கட்சி வாக்கால் தான் வெற்றி பெற வில்லையெனவும் தனது தனிப்பட்ட வாக்குகளினாலயே வெற்றி பெற்றதாக வும் குறிப்பிட்டுள்ளமை கட்சியின் மீதான மக்களின் நம்பிக்கையையும் அங்கீகாரத்தையும் தரந்தாழ்த்திக் கேவலப்படுத்தும் அகங்காரமிக்க போக்காகும். இத்தகைய பொறுப்பற்ற நபர் தொடர்ந்தும் கட்சியில் இருப்பது குறித்து மீள் பரிசீலனை செய்யவேண் டும்.

கட்சி தோல்வி அடைந்துவிட்டது என கட்சிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத் தும் வகையில் சட்டரீதியற்ற பேச்சாள னாக செயற்பட்டு கட்சியை இல்லா தொழிக்கும் ஆபிரஹாம் சுமந்திரனின் இந்தச் செயல்பாட்டில் ஒன்றியிருக்கும்



நிகழ்ச்சி நிரலின் பின்னணி என்ன? ஆபிரஹாம் சுமந்திரனினால் தனிப் பட்ட கருத்துகளாக முன்வைக்கப்படும் கருத்துக்கள் கட்சியின் கருத்தாகப் பிரதிபலிக்கச் செய்யப்படுவதும் மக்கள் அதை அப்படியே உள்வாங்கிக் கொள்வ தும் கூட்டமைப்பின் வாக்கு வங்கியை தொடர்ந்தும் சிதைப்பது மட்டுமின்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இல்லாதொழிக்கும் பாரிய பணியைச் செய்யும் செயற்பாடுமாகும்.

குறித்த நபர் கூட்டமைப்பின் பேச்சாளர் அல்லர் என்பதை கூட்ட மைப்பின் தலைவர் என்ற வகையில் நீங்கள் விரைவாக ஊடக அறிக்கை யொன்றினை சமர்ப்பித்து குறித்த நபரால் ஏற்படுத்தப்பட்ட களங்கத்தை யும் நற்பெயருக்கு ஏற்பட்ட சிதைவை யும் ஓரளவுக்காவது சரிசெய்வதுடன் பொருத்தமான தமிழ்த் தேசிய உணர்வாளர் ஒருவரை கட்சியின் பேச்சாளராக நியமிப்பதனூடாக இக்காரியத்தை இன்னும் திறம்படச் செய்ய முடியுமாக இருக்கும்.

தலைமைத்துவத்தை மீறி தலைமை யின் செல்வாக்கைக் கேள்விக்குள்ளாக்கி விகடமாக்கிடும் குறித்த செயல்பாட்டை உடனடியாகத் தடுத்து நிறுத்தி கட்சியின் பலத்தை மீளவும் நிலைபெறச் செய்ய தாங்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பீர் கள் என்று திடமாக நம்புகின்றோம். ஒரு தனி நபரின் தன்னிச்சையான செயற்பாடு களும் கருத்துகளும் இதற்கு முந்தி யொருபோதும் இப்படிக் கட்சிக்கு அபகீர்த்தியை ஏற்படுத்திவிடவில்லை. மக்களின் நம்பிக்கையை வென்று மேலும் கட்சியின் ஸ்திரப்பாட்டை நிலைப்படுத்த தலைமைத்துவம் வேகமா கச் செயல்படும் என்ற எதிர்பார்ப்பு வீண் போகாது என்றே நம்புகின்றோம்.

ஆபிரஹாம் சுமந்திரன் கட்சியின் ஊடகப் பேச்சாளராக இருந்த போது தமிழ் மக்களின் விருப்பத்திற்கும் எதிர் பார்ப்பிற்கும் நேர்மாறாக தெரிவித்த சில கருத்துகள் மக்களிடையே அதிர்வலை களை ஏற்படுத்தியபோது அந்தக் கருத்துக்கள் கட்சியின் கருத்துகளல்ல, அவை அவரது தனிப்பட்ட கருத்துகளே என்று நீங்களே அறிக்கையிட்டும் தொலைக்காட்சி நேர்காணலிலும் வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்த சந்தர்ப்பத்தையும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாக கட்சியில் எதிர்பார்ப்புகள் ஏதுமின்றி எனது பங்கினை ஆற்றி வருகின்றேன். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்சியில் உள்ள ஏதேனுமொரு பதவி நிலையைக் கோரியோ அல்லது தேர்தல் காலத்தில் போட்டியிடுவதற்கு இடமொதுக்கக் கோரியோ அல்லது தேசியப் பட்டிய லில் நியமிக்கும்படியோ ஒருபோதும் நான் எனக்காக தலைவர் என்ற வகையில் உங்களிடமோ அல்லது வேறு நிர்வாகிகளிடமோ விண்ணப்பம் செய்த தில்லை. தமிழ் மக்களின் உணர்வுகளுக் காகவே முழுமையாக எந்த எதிர்பார்ப்பு மின்றி கட்சியை நேசிக்கின்றேன். அந்த அடிப்படையில் கட்சியின் இருப்பு மீது எனக்கு அதீதமான அக்கறை இருப்பது இயல்பானதே. ஆகவேதான் ஒற்றை நபருக்காகக் கட்சியை அடமானம் வைக்கத் தேவையில்லை என்ற நிலைப் பாட்டில் கட்சியினுள்ளே பலர் இருப்பதை தலைமையின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டியது எனது கடமையுமாகும்.

அடுத்து வரும் தேர்தலினைச் சந்திப்பதற்கு முன்னரே பொறுப்புள்ள நிர்வாகிகள் கட்டமைப்பை உருவாக்கி அதன் மூலம் காத்திரமான செயற்பாடு களை முன்னெடுத்து சரிவிலிருந்து கட்சியைப் பாதுகாத்து மக்கள் உரிமைக் கான ஏக குரலாக கூட்டமைப்பு திகழ்வதை நாம் உறுதிப்படுத்தியாக வேண்டும். மோசமான விமர்சனங்கள் நாளுக்கு நாள் கட்சியின் நற்பெயரைச் சிதைத்துக்கொண்டே இருக்கின்றது என்பதையும் தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

தந்தை செல்வா முதற்கொண்டு இப்போது வரைக்குமான காலத்தில் தமிழர்களின் ஒற்றைக்குரலாக நமது குரல் இருந்துள்ளது. பலமிக்க நிலையில் அதை மீளவும் நிலைநிறுத்தி உறுதிப் படுத்திக்கொள்வது காலத்தின் கட்டாய மாகும். இதன் அவசரத்தையும் அவசியத் தையும் உணர்ந்து தீர்க்கமான முடி வொன்றினை விரைவாக தலைமை எடுக்க வேண்டுமென்று அவாவி நிற்கின் றேன். இவ்விடயத்தை கருதிற்கொண்டு தீர்க்கமான முடிவை எடுக்காவிடின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர் காலம் கேள்விக்குறியாகும். தங்களின் தலைமைத்துவக் காலத்தில் தமிழரின் அரசில் வல்லமை சிதைக்கப்பட்டது என்ற அவப்பெயரைச் சம்பாதித்துவிடக் கூடாது கடந்த கால நெருக்கடி நேரத்தில் அரசியலில் ஆக்ரோஷம் மிக்க தமிழரின் குரலாக நீங்கள் இருந்துள்ளீர் கள். இறுதியில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற வார்த்தைகளை மொழியும் இக்கட்டான தருணத்துக்கு தாங்கள் வந்துவிடக் கூடாது என்ற நன்னோக்கைப் புரிந்துகொள்வீர்கள் என்று நினைக்கின்றேன். ஏனெனில் மக்கள் அப்படியொரு பிரயோகத்தை தங்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை.

இந்த இக்கட்டான நிலையில் தங்களின் கடமையைச் சரியாகச் செய்யா விட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற வரலாறு இறுதி அத்தியாயத்தை எழுதிக்கொள்ளும் என்பதைத் தாங்க ளும் நன்கு அறிவீர்கள். அவ்வாறு நிகழ்ந் தால் அந்த வரலாற்றுத் தவறுக்குப் பொறுப்பாளியாக தாங்களே இருக்க நேரிடும் என்பதையும் புரிந்து வைத்தி ருப்பீர்கள். அத்தகைய வரலாற்றுத் தவறையல்ல வரலாற்றுத் தப்பை தாங்கள் செய்ய மாட்டீர்கள் என்று திடமாக நம்புகின்றேன்.

தமிழ்த் தேசியத்தின் வலிமையான இருப்பின் அவசியத்தைக் கருதி இந்த விடயத்தில் மேலதிக கால விரயத்தைத் தவிர்த்து விரைவாக முடிவெடுக்கும் படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**கே.வி.தவராசா**
(ஜனாதிபதி சட்டத்தரணி)
தமிழரசுக்கட்சி கொழும்புக் கிளைத் தலைவர்
(அரசியல் குழு உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்று மோதிரம்

COLOMBO 2021

அருந்ததியின்

# வரன் தேடுவோம் வாருங்கள்

**திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி**
ஆயிரக்ககணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு அரச தனியார் தொழில்புரியும் மணமக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள். இந்நிகழ்விற்கு எமது ஜோதிடர் வரவுள்ளதால் உங்களுக்கு பொருத்தமான சாதகங்களை பெற்று உடனடியாகவே பொருத்தம் பார்த்துக்கொள்ள முடியும்.

**ஏப்ரல் 25 2021**

வெள்ளவத்தை
**Marine Grand**
41 Station Avenue, Marine Drive, Wellawatte

காலை 9.00 மணியிலிருந்து
12.00 மணிவரையில்

Fabulous Fashion Show with inspiring ideas

# BRIDAL FASHION SHOW

50+ Beauticians
Under one roof

Tickets for the Audience are **Free!**

SUN | APRIL 25 | 2021

FOUR O' CLOCK IN THE EVENING
ORGANIZED BY ARUNTHATHEE (PVT) LTD

**Marine Grand**
41 Station Avenue, Marine Drive, Wellawatte
(Near Wellawatte Railway Station)

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்
**www.arunthathee.com | +94 777 164 524**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களவர் எதிர்ப்பை சமாளிக்கவே அரசாங்கம் வடக்கில் கைது நாடகம்



## சாள்ஸ் எம்.பி. காட்டம்

மன்னார்,ஏப்.18

**சிங்கள மக்களின் எதிர்ப்பை சமாளிக்கவே அரசாங்கம் வடக்கில் கைது நாடகத்தை அரங்கேற்றி வருகிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.**

வடபகுதியில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் இடம்பெற்றுவரும் கைதுகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

தற்போதைய கோட்டாபய அரசாங்கம் சிங்கள மக்களின் பெரும்பான்மையான ஆதரவோடு ஆட்சி பீடம் ஏறிய போதிலும் அந்த மக்களின் கடும் எதிர்ப்புக்குள்ளாகிய நிலை காணப்படுகின்றது.

இதனால், பௌத்த துறவிகள், சிங்கள மக்கள் அரசாங்கத்துக்கு எதிரான செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக ஆட்சிக்கு வரும்போது இந்த அரசாங்கம் நாட்டுக்கு நன்மை புரியும், நீதியை நிலைநாட்டும் நேர்மையான அரசாக இருக்கும் என சிங்கள மக்கள் விரும்பியே இந்த அரசாங்கத்துக்கு பூரண ஆதரவு வழங்கி ஆட்சிபீடம் ஏற்றினர்.

எனினும் தற்போதைய அரசாங்கமானது இலங்கையின் முக்கிய ஸ்தானங்களை வெளிநாடுகளுக்கு தாரை வார்க்கும் செயல்பாட்டில் ஈடுபடுவதன் காரணமாக சிங்கள மக்கள், பௌத்த துறவிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டுவருகின்றனர்.

இந்நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளை மீள உருவாக்க முயற்சிக்கின்றனர் எனக்கூறி இளைஞர், யுவதிகளை கைது செய்து சிங்கள மக்களின் எதிர்ப்பை சமாளிப்பதற்காக வடக்கில் பல்வேறுபட்ட கைது நடவடிக்கைகள் இந்த அரசால் திட்டமிடப்பட்டு இடம்பெற்று வருகின்றது.

வடக்கு - கிழக்கில் புலிகள் மீள உருவாகுகின்றனர். ஆனால், கோட்டாபய அரசால் மாத்திரமே இந்த விடுதலைப் புலிகள் உருவாக்கத்தை கட்டுப்படுத்த முடியும் என்ற செய்தியை தென்னிலங்கை மக்களுக்கு தெரிவித்து சிங்கள மக்களை கோட்டாபய மீது நம்பிக்கை வைக்க வைத்து அரசாங்கத்தின் மீது உள்ள எதிர்ப்பு உணர்ச்சியை இல்லாமல் செய்வதற்காகவே இந்த வலுக்கட்டாயமான செயல்பாடு முன்னெடுக்கப்படுகின்றது. இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். யாழ்ப்பாணத்தில் நால்வர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள சம்பவம் அரசாங்கத்தின் திட்டமிட்ட நாடகமாகும். தென்னிலங்கை மக்களை சமாளிப்பதற்காக அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படும் ஒரு காரியமே இந்தக் கைது நடவடிக்கை என நான் நம்புகின்றேன் எனத் தெரிவித்தார். (எ)

# துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலம் நாளை பரிசீலனை

கொழும்பு,ஏப்.18

அரசாங்கம் பாராளுமன்றில் சமர்ப்பித்துள்ள, கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்ட மூலத்தை ஆட்சேபித்து உயர் நீதிமன்றில் 19 விஷேட மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அவை அனைத்தையும் நாளை 19 ஆம் திகதி திங்களன்று பரிசீலனைக்கு எடுக்க உயர் நீதிமன்றம் பட்டியலிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் நீதியரசர்களான புவனேக அலுவிஹார, பிரியந்த ஜெயவர்த்தன, முர்து பெர்னாண்டோ மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய ஐவர் கொண்ட நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் முற்பகல் 10 மணிக்கு உயர் நீதிமன்றின் 501 ஆம் இலக்க அறையில் மேற்படி மனுக்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படவுள்ளன.

இவ்வாறு பரிசீலனைக்கு எடுக்கப்படவுள்ள மனுக்கள் அனைத்தும் அரசமைப்பின் 120 ஆவது உறுப்புரைக்கு அமைய உயர் நீதிமன்றின் அரசமைப்பு சார் நியாயாதிக்கத்தை உறுதிப்படுத்தும் வகையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இம்மனுக்களில் பிரதிவாதியாக சட்ட மா அதிபர் பெயரிடப்பட்டுள்ளார்.

குறிப்பாக இந்த 19 விஷேட மனுக்களிலும், அரசாங்கம் பாராளுமன்றில் சமர்ப்பித்துள்ள, கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலத்தின் 13 பிரிவுகள் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அந்த 13 பிரிவுகளும் சாதாரணமாக சட்ட மூலம் ஒன்று சட்டமாக நிறைவேற்றப்படும் படி முறையில் நிறைவேற்ற முடியாது எனவும், அதில் 7 விடயங்கள் அடங்கிய பிரிவுகளை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பும், 6 பிரிவுகளை நிறைவேற்ற பாராளுமன்றின் மூன்றிலிரண்டு விஷேட பெரும்பான்மையும் அவசியம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ)

# பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய நாளை கட்சித்தலைவர்கள் கூட்டம்

கொழும்பு,ஏப்.18

பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான தெரிவுக்குழுவின் கூட்டம் கட்சித் தலைவர்களின் பங்குபற்றலுடன் நாளை நடைபெறவுள்ளது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் அன்றைய தினம் பிற்பகல் 2 மணிக்கு பாராளுமன்ற வளாகத்தில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளதாக பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதன்போது 20 ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ள ஏப்ரல் மாதத்தின் இறுதி பாராளுமன்ற வாரத்தில் சமர்ப்பிக்கப்பட இருக்கும் பிரேரணைகள் மற்றும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்ற சட்ட மூலங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பான யோசனைகளை எதிர்வரும் 21 ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவும், அதுதொடர்பான விவாதம் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் நடத்தவும் இதற்கு முன்னர் இடம்பெற்ற பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது கலந்துரையாடப்பட்டிருந்தது.

எனவே, நாளை திங்கட்கிழமை நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது இது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார். (எ)

# ஹெரோயின், ரூ. 4 லட்சம் பணத்துடன் பெண் கைது

கொழும்பு,ஏப்.18

பொரளை - மகசின் வீதியில் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் 4 இலட்சத்து 13 ஆயிரத்து 350 ரூபாய் பணத்துடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகசின் வீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பு தெற்குப் பிரிவு குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது ஹெரோயின் மற்றும் பணத்துடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, பொரளை பகுதியைச் சேர்ந்த 34 வயது பெண்ணொருவர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து 245 கிராம் 450 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் 4 இலட்சத்து 13 ஆயிரத்து 350 ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபரான பெண் மேலதிகவிசாரணைகளுக்காக பொரளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், பொலிஸார் அவர் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# சீரற்ற காலநிலை; 1,365 பேர் பாதிப்பு

கொழும்பு,ஏப்.18

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 324 குடும்பங்களைச் சேர்ந்த 1,365 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் கண்டி மாவட்டத்தின் கங்கவட்ட கோரல பகுதியைச் சேர்ந்தவர்கள் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இப்பகுதியில் 195 குடும்பங்களைச் சேர்ந்த 846 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 142 பேர் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

சீரற்ற வானிலை காரணமாக வீடொன்று முற்றிலுமாக சேதமடைந்துள்ளதாகவும், 113 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு, பதுளை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் மின்னல் தாக்கம் மற்றும் வெள்ளத்தில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர். (எ)

# "பார்க் அன்ட் ரைட் சிட்டி பஸ்" சேவையை விரிவுபடுத்த முடிவு

கொழும்பு,ஏப்.18

கொழும்பு நகரில் வாகன நெரிசலுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட "பார்க் அன்ட் ரைட் சிட்டி பஸ்" சேவையை விரிவுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சில வாரங்களில் பிலியந்தலை 120 பஸ் பாதையினூடாகவும் (bus route) காலி வீதி மொரட்டுவ - கொழும்பு பஸ் பாதையினூடாகவும் நாட்டின் இன்னும் சில பிரதான நகரங்களினூடாகவும் இந்த பஸ் சேவையை விரிவுபடுத்த போக்குவரத்து இராஜாங்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது கொழும்பை அடுத்துள்ள 4 பஸ் பாதைகளினூடாக பயணிக்கின்ற சிட்டி பஸ் வாகனங்களின் மூலம் குறிப்பிடத்தக்க அளவு வருமானம் கிடைப்பதாக இலங்கை போக்குவரத்து சபை குறிப்பிட்டுள்ளது.

சிட்டி பஸ் சேவை கடந்த ஜனவரி 15ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. தற்போது அந்த பஸ் சேவை கொட்டாவ மாகும்புற பல்லின போக்குவரத்து மத்திய நிலையத்திலிருந்து



138, 174, 112 மற்றும் 115 ஆகிய பஸ் பாதைகளினூடாகப் (bus route) இடம்பெறுகிறது.

இந்த பஸ் சேவைக்குச் பொதுவான பஸ் கட்டணத்தின் ஒன்றரை மடங்கு கட்டணம் அறவிடப்படுகின்றது. இந்த சேவையின் மூலம் கடந்த மூன்றரை மாதங்களினுள் குறிப்பிடத்தக்களவு வருமானம் கெறப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu



# மும்பை இந்தியன்ஸ் வெற்றி!

சென்னை, ஏப். 18

போல்ட், ராகுல் சாகரின் அபார பந்துவீச்சு கைகொடுக்க ஹைதராபாத் அணியை 137 ஓட்டங்களுக்குள் சுருட்டி 13 ஓட்டங்களால் வெற்றி கொண்டது மும்பை இந்தியன்ஸ் அணி.

ஐ.பி.எல். இருபது - 20 தொடரில் நேற்று நடந்த ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ், ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. குயின்ரன் டி கொக் - ரோஹித் சர்மா இணை சிறந்த தொடக்கத்தை அமைத்தது.

இருவரும் 55 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்ற நிலையில், ரோஹித் சர்மா 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சூரியகுமார் யாதவ் 10 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

5 பௌண்ட்ரிகளுடன் 40 ஓட்டங்களை சேர்த்த டி கொக்கும் ஆட்டமிழக்க, பின்னர் வந்த இஷான் கிஷன் 12, ஹார்திக் பாண்ட்யா 7 என ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் மும்பை இந்தியன்ஸ் அணி 5 விக்கெட்கள் இழப்புக்கு 150 ஓட்டங்களைப் பெற்றது.

கிரன் பொலார்ட் 3 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரியுடன் 35 ஓட்டங்களையும் குர்ணல் பாண்ட்யா 3 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஹைதராபாத்தின் பந்துவீச்சில் விஜய் சங்கர், ரஹ்மான் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

151 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கும் தொடக்கம் சிறப்பாக அமைந்தது.

அணித் தலைவர் வோர்ணர் 36 ஓட்டங்களையும், பெயர்ஸ்ரோ 43 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆனால் பின்னால் வந்த வீரர்கள் எவரும், போல்ட், ராகுல் சாகரின் பந்துவீச்சுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

இதனால், ஹைதராபாத் அணி 19.4 ஓவர்களில் 137 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

மும்பையின் பந்துவீச்சில் போல்ட், ராகுல் சாகர் தலா 3 விக்கெட்களை கைப்பற்றினர். ஆட்டநாயகனாக கிரன் பொலார்ட் தெரிவானார். (ஐ)

# பென் ஸ்ரோக்ஸிற்கு நாளை சத்திர சிகிச்சை!

லண்டன், ஏப். 18

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான பென் ஸ்ரோக்ஸின் இடது கை ஆள்காட்டி விரலில் ஏற்பட்ட காயத்துக்கு வரும் நாளை திங்கட் கிழமை சத்திர சிகிச்சை நடைபெறவுள்ளது.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியில் இடம்பெற்றிருந்தார் பென் ஸ்டோக்ஸ். கடந்த திங்கள்கிழமை நடைபெற்ற ராஜஸ்தான்-பஞ்சாப் அணிகள் இடையிலான ஆட்டத்தின்போது, பஞ்சாப் வீரர் கிறிஸ் கெயில் அடித்த பந்தை பென் ஸ்ரோக்ஸ் பிடி எடுத்தார். அப்போது அவருடைய இடது கை ஆள் காட்டி விரலில் காயம் ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து அவருக்கு எக்ஸ்-ரே மற்றும் சிரிஸ்கான் எடுக்கப்பட்டது. அதில், காயம் உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து இங்கிலாந்தின் லீட்ஸ் நகரில் அவருக்கு சத்திர சிகிச்சை செய்யப்படவுள்ளது.

சிகிச்சையின் பின்னர் ஸ்ரோக்ஸ் 3 மாதங்கள் ஓய்வில் இருப்பார். அதனால், அவர் எந்தப் போட்டியிலும் விளையாடமாட்டார் என இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. (ஐ)



# சென்னை அணியின் இதயத்துடிப்பு டோனி

மும்பை, ஏப். 18

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் இதயத்துடிப்பு மகேந்திரசிங் டோனிதான். 200 போட்டிகளுக்கும் மேலாக அவர் இன்னும் விளையாட வேண்டும் என்று அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளெமிங் தெரிவித்தார்.



மும்பையில் நேற்று முன் தினம் நடந்த ஐ.பி.எல். இருபது - 20 தொடரின் லீக் ஆட்டத்தில், பஞ்சாப் கிங்ஸ் அணியை 6 விக்கெட் வித்தியாசத்தில் தோற்கடித்தது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி.

அபாரமாகப் பந்து வீசிய சிஎஸ்கே வீரர் தீபக் சஹர் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றி அசத்தி ஆட்டநாயகன் விருதையும் வென்றார்.

இந்தப் போட்டி சிஎஸ்கே அணிக்காக டோனி விளையாடும் 200ஆவது போட்டியாக அமைந்தது. வெற்றிக்குப்பின் சென்னை அணியினர் புடைசூழ, டோனி கேக் வெட்டி, பயிற்சியாளர் பிளெமிங் உள்ளிட்டோருக்கு வழங்கினார்.

இதன் பின்னர் பயிற்சியாளர் பிளெமிங் கூறுகையில்,

கடந்த 2008-ம் ஆண்டிலிருந்து சிஎஸ்கே அணியை டோனி தலைமை தாங்கி நடத்தி வருகிறார். அவர் நீண்ட காலம் ஒரே அணியில் இருந்ததைக் குறிப்பிட்டு பாராட்ட வேண்டும். டோனி இதுவரை சென்னை அணிக்காக 200 போட்டிகளில் விளையாடியுள்ளார். இன்னும்

## பயிற்சியாளர் புகழாரம்

சிறப்பாக விளையாட விருப்பமாக இருக்கிறார். அணி நிர்வாகத்துக்கும், கிரிக்கெட்டுக்கும் பங்களிப்பு செய்ய அவரின் மனநிலை தயாராக இருக்கிறது.

டோனியால் அணி நிர்வாகம் வளர்ந்துள்ளது, அணி நிர்வாகத்தால் டோனியும் வளர்ச்சி கண்டுள்ளார் என நினைக்கிறேன். டோனிக்கும் அணி நிர்வாகத்துக்கும் சிறந்த தொடர்பு, நினைத்தாலே வித்தியாசமாக இருக்கிறது. சென்னை அணியின் இதயத்துடிப்பாக டோனி இருக்கிறார். இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. அணியில் சிறப்பாகச் செயல்படுவது, வழிகாட்டுதல், தலைமை என அவரைப் பற்றி குறிப்பிடலாம் - என்றார். (ஐ)

# இந்தியாவில் உலகக் கிண்ணம்! பாகிஸ்தான் அணிக்கு அனுமதி!!

புதுடில்லி, ஏப். 18

இந்தியாவில் இந்த ஆண்டு ஒக்ரோபர் நடக்கும் உலகக் கிண்ணம் இருபது - 20 தொடருக்காக இந்தியா வரும் பாகிஸ்தான் அணிக்கு எந்தவிதமான சிக்கலும் இல்லாமல் வீஸா வழங்கப்படும் என்று அந்த நாட்டு அரசு உறுதியளித்துள்ளது.

இதனால், திட்டமிட்டபடி இருபது - 20 உலகக் கிண்ணத் தொடர் ஒக்ரோபரில் நடக்கும். இதில் மொத்தம் 16 அணிகள் பங்கேற்கின்றன. 45 போட்டிகள் நடத்தப்படுகின்றன.

உலகக் கிண்ணத் தொடர் தொடர்பில் பேச நேற்று முன்தினம் இந்திய கிரிக்கெட் சபையின் உயர்மட்ட கூட்டம் நடந்தது. இதிலேயே, பாகிஸ்தான் அணிக்கு வீஸா அளிக்கப்படுவதற்கான அரசின் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று இறுதி போட்டியை அஹமதாபாத் நரேந்திமோடி மைதானத்தில் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

இதுதவிர டில்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, பெங்களூரு, ஹைதராபாத், தர்மசாலா, லக்னோ ஆகிய இடங்களில் போட்டியை நடத்தவும் ஆலோசிக்கப்பட்டது. (ஐ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் திரு. எப்.எக்ஸ்.அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : நாளும் நல்லவை
வழங்குபவர் திரு. ந. சத்தியபாலன்
எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை



**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)
6.00 மணி : HELLO கோடம்பாக்கம்
**இரவு**
7.00 மணி : SPOT LIGHT -
சிரேஸ்ட சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : செல்லாடுகளம்
10.00 மணி: பதிவு - MDM. இக்பால் -
கொழும்பு மாநகர பிரதி மேயர்




**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org